Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

(8-1-67) இதழ் 829

பராபவ ரமழான் 26 மார்கழி 24 ஞாயிற்றுக்கிழமை

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்
ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD. ONE DOLLAR
டொலர் கோர்ப்பரேஷன்
14டாம் வீதி கொழும்பு

## கறுப்புக்கொடிகளுக்கு தடை

கொழும்பு, ஞாயிறு

இன்று கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்படுவது ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்துவது ஆகியவற்றுக்கு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. ஜே. அபயகோன் தடை விதித்துள்ளார். தமிழ் மொழி விசேஷ மசோதா கொண்டுவரப்பட்ட தினமான இன்றையதினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்க எதிர்க்கட்சியினர் மேற்கொண்டு

(8-ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் எண்ணை படிவங்கள்

## மார்ச் மாதத்தில் ஆராய்ச்சி தொடங்கும்

கொழும்பு, சனி

இலங்கையின் வடமேற்குப் பகுதியிலும் வடககுப்பகுதியிலும் எண்ணெய்ப் படிவங்கள் இருப்பதாகக் கருதப்படுவதைத் தொடர்ந்து எண்ணெய்ப் படிவங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி வேலைகள் மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப் படவிருக்கின்றன.

எண்ணெய்ப்படிவங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகளில் பிரஞ்சுக்கம்பனி அரசாங்கத்துக்கு உதவியளிக்கவிருக்கிறது.

பெற்றோலியம் கூட்டுஸ்தாபனம் மேற்கொண்டுள்ள இந்த பூர்வாங்க ஆராய்ச்சிக்கு சுமார் பதினைந்து லட்சம் ரூபாவரை செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னிந்தியாவில் தமிழ் நாட்டில் சில இடங்களில் குறிப்பாக காவிரியாற்றுப் பகுதியில் எண்ணெய்ப் படிவங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையின் வடக்கு, வடமேற்குப் பகுதியிலும் எண்ணெய்ப்படிவங்கள் இருக்கலாமெனக் கருதப்படுகிறது. இக்கருத்தை வெளிநாட்டு நிபுணர்களும் ஊர்ஜிதப்படுத்தியுள்ளனர்.

## பஸ் விபத்து: 85 பேர் பலி

மணிலா, ஜன. 6

பிலிப்பைன்ஸில் மணிலாவுக்கு அருகே இன்று ஏற்பட்ட கோர பஸ்விபத்தில் 85 பேர் மாண்டனர். இரண்டு பஸ்கள் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நிகழ்ந்தது. காயமடைந்த 35 பேரின் பலரது நிலைமை கவலைக்கிடமாகவிருப்பதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. பிலிப்பைன்ஸில் ஏற்பட்ட மிகவும் மோசமான விபத்து இது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வேலைநிறுத்தங்கள் நீடிக்கின்றன

கொழும்பு, சனி

இலங்கை மத்தியவங்கி ஊழியர்களின் வேலைநிறுத்தம் சமரசத்துக்கான எந்தவித அறிகுறியுமின்றி நீடித்துக்கொண்டிருக்கிறது.

இதே சமயம் வர்த்தக வங்கிகளும் தங்கள் கோரிக்கைகளுக்கு இம்மாதம் 10-ந் திகதிக்கு முன் ஓர் உறுதியான முடிவு தெரியாவிட்டால் இம்மாதம் 15ந் திகதி வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

மத்தியவங்கி ஊழியர்களாயிரத்து இருநூறுபேர் வேலைநிறுத்தம்செய்து வருகின்றனர். இருதரப்பினரும் பிடிவாதமாக இருப்பதால் இப்போதைக்கு வேலைநிறுத்தம் முடிவடைவதற்கான அறிகுறியெதுவும் காணப்படவில்லை.

இதேசமயம் பல்வைத்திய நிபுணர்களின் வேலைநிறுத்தமும் முடிவடைவதற்கான அறிகுறிகளின்றி நீடித்து வருகிறது. சுமார் நூறுபேர் வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டுள்ளனர். பெருந்தொகையான நோயாளர் நாட்டின் பல பகுதிகளிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கும் சிகிச்சைக்காகச் சென்று ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

கொழும்பிலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனமொன்றில் அதன் ஊழியர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்கள் இலவசமாக வழங்கப்பட்டு வந்த மதிய உணவு மூன்று நாட்களாகக் குறைக்கப்பட்டதை ஆட்சேபித்து அந்த ஸ்தாபன ஊழியர் இன்று அரைநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர்.

## வெங்காயம், கிழங்கு தட்டுப்பாடு; விலை உயர்வு

கொழும்பு, சனி

பம்பாய் வெங்காயம், உருளைக்கிழங்கு முதலிய உபஉணவுப்பொருள்களுக்கு கொழும்பிலும் மற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இப்பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

பம்பாய் வெங்காயத்தின் கட்டுப்பாட்டு விலை றாத்தல் 25 சதம்தான். ஆனால் மார்க்கெட்டில் றாத்தல் 40 சதம் முதல் 50 சதம்வரை விற்கப்படுகிறது. செத்தல் மிளகாயின் விலை றாத்தல் ஒன்றுக்கு ஒரு ரூபாய் தொண்ணூறு சதம்தான். ஆனால் மார்க்கெட்டில் மூன்று ரூபாய் முதல் மூன்றரை ரூபாய்வரை விற்கப்படுகிறது. கொத்தமல்லியின் கட்டுப்பாட்டு விலை 64 சதம்தான். ஆனால் மார்க்கெட்டில் இரண்டு ரூபாய் முதல் இரண்டேகால்வரை விற்கப்படுகிறது. சில பகுதிகளில் அதிக விலைக்கும்கூடப் பொருள்கள் கிடைப்பதாக இல்லை.

பம்பாய் வெங்காயம், உருளைக் கிழங்கு ஆகியவை பதுக்கல் செய்யப்படக்கூடிய பொருள்களல்லாததால் பதுக்கலே இப்பொருள்களின் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்று கூறமுடியாதென்று கருதப்படுகிறது.

இப்பொருள்களின் விநியோகமுறை தான் தட்டுப்பாட்டுக்குக் காரணமென்று வர்த்தக வட்டாரங்கள் கூறுகின்றன.

சமீபத்தில் இந்தியாவிலிருந்து பம்பாய் வெங்காயம் கிழங்கு வகைகளை ஏற்றிக்கொண்டுவந்த கப்பல் ஆறுயிரம் தொன்னுக்குப் பதிலாக இரண்டாயிரம் தொன் பொருள்களுடன் தான் இங்கு வந்து சேர்ந்ததாம். இந்தியாவில் உணவு உற்பத்தியில் ஏற்பட்ட தடையும் அங்கு நிலவும் பொருளாதாரக் கஷ்டமுமே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

## இ. போ. ச. தரும் பொங்கல் 'பரிசு'

யாழ்ப்பாணம், சனி

கன்னாகத்துக்கான புதிய பஸ் நிலையம் ஒன்றை பொங்கல் பரிசாக இலங்கைப் போக்குவரத்துச் சபை வழங்குகின்றது. இதன் புதிய பஸ் நிலையம் கட்டுவதற்காக பட்டினசபை 17 ஆயிரம் ரூபாவை வழங்குகின்றது.

## மாஜி மேயர் துரையப்பா யாழ்ப்பாணம் திரும்பினர்

### மீண்டும் வழக்குத்தொடர முயற்சி செய்வாராம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பிரிவிகவுன்சிலுக்குசென்று வழக்காடுவதற்கு தமக்கு ஆதரவும் உதவியும் தந்த வரியிறுப்பாளர்கள் மற்றும் அபிமானிகள், பிரமுகர்கள் எல்லோருக்கும் தாம் தமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்வதாக யாழ்ப்பாணம் முன்னாள் மேயர் திரு. ஏ. டி. துரையப்பா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர சபையை உள்ளூராட்சி அமைச்சர் கலைத்ததற்கெதிரான வழக்கின் தீர்ப்பை அறிந்து இன்று திரும்பியுள்ள திரு. துரையப்பா வழக்கின் தீர்ப்பு விபரங்கள் வெளியானதும் தாம் மாநகரசபை கலைத்ததற்கெதிராக மேலுமொரு வழக்குத்தொடரப் போவதாகவும் தமது கட்சி வெற்றிபெறும் என்பதில் தாம் ...

(8-ம் பக்கம் பார்க்க)

## வயலில் வெட்டினராம்; காயப்பட்டவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சாவகச்சேரியிலுள்ள மண்டுவிலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கணேசன் என்ற (வயது 28) வாலிபர் பலமான வெட்டுக்காயங்களுடன் கவலைக்கிடமான நிலைமையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இரண்டு நாட்களாக இவர் அறிவிழந்த நிலையில் இருந்தார்.

அறிவு தெரிந்தபோது காயங்களுக்குள்ளான கணேசனைப் பொலிசார் விசாரணை செய்தபோது அவர் தெரிவித்ததாவது:- இம் மாதம் 5-ம் திகதி மண்டுவிலிலுள்ள எனது வயலில் நான் வேலை செய்து கொண்டிருந்தேன். நண்பகல் 12 மணியளவில் பொன்னர் இரத்தினம், வேலுப்பிள்ளை இராசா ஆகிய இருவரும் 'டிராக்டர்' ஒன்றில் எனது வயலுக்கு அண்மையில் வந்து, வரம்புகளை உடைத்துக்கொண்டு, எனது வயலுக் கூடாக, அவர்களுடைய வயலுக்குப் போனார்கள், இதனை நான் தடைசெய்தேன். உடனே அவர்கள் என்னைத் தகாதவார்த்தைகளால் பேசியதோடு, இராசா பின்புறத்தால் வந்து என்னைக் கட்டிப்பிடிக்க, இரத்தினம் கத்தியால் எனது கையிலும், முகத்திலும் மண்டையிலும் வெட்டினார், இதனால் நான் அறிவிழந்து விட்டேன்.

காயமடைந்த கணேசனுக்கு ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இவர் அறிவிழந்த நிலையில் இருந்தால் இரண்டு நாட்களின் பின்னரே இவரது வாக்குமூலத்தைப் பொலிசார் பதிவுசெய்தது குறிப்பிடத்தக்கது. பொலிசார் மேலும் புலன் விசாரணை செய்கின்றனர். (ந. தி)

## பெண்ணை ஏமாற்றி வழிப்பறி

யாழ்ப்பாணம், ஞாயிறு

இளம் பெண்ணொருவரின் தாலிக்கொடியை பட்டப்பகலில் இரு வாலிபர்கள் அபகரித்துச்சென்று விட்டார்களாம். இச் சம்பவம் யாழ்ப்பாணம் கன்னாதிட்டிச்சந்திக்கருகாமையிலுள்ள ஒழுங்கை ஒன்றில் நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி பொலிசாருக்குத்தெரிவிக்கப்பட்டபோதிலும் சம்பந்தப்பட்ட நபர்கள் எவரும் இன்னும் கைது செய்யப்படவில்லை. கன்னாதிட்டிச்சந்திக் கருகாமையில் கிழங்கு விற்றுக்கொண்டிருந்த இவ் இளம்பெண்ணிடம் இருவாலிபர்கள்வந்து தங்களது வீடு அருகிலுள்ள ஒழுங்கையுள் இருப்பதாகவும், தங்களுக்குக் கிழங்கு வேண்டுமென்றும், வீட்டுக்கு வருமாறும் கூறி அருகிலிருந்த ஒழுங்கைக்குள் அழைத்துச் சென்று அவரது தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடியதாக அறவிக்கப்பட்டுள்ளது. பொலிசார் மேலும் புலன் விசாரணை செய்கின்றனர். (ந. தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பசுபாதுகாப்பு விவகாரம்**

# அரசாங்கத்தின் [கமிட்டி நியமன] கோரிக்கையை பூரி சுவாமிகள் நிராகரித்தார்

## உண்ணுவிரதம் 50-வது நாள்

புதுடில்லி, ஜன. 7

பசு பாதுகாப்பு சம்பந்தமாக ஆராய்வதுபற்றிய அரசாங்கத்தின் மற்றுமொரு கோரிக்கையையும் பூரி மடத்து சுவாமிகள் ஜகத்குரு சங்கராச்சாரியார் நிராகரித்துவிட்டார்.

தமது கோரிக்கை நிறைவேறும் வரை தொடர்ந்து உண்ணுவிரதமிருக்கப்போவதாக அவர் நேற்று அறிவித்தார். இன்றுடன் (சனிக்கிழமை) பூரி சுவாமிகள் 49-வது நாளாக உண்ணுவிரதமிருந்து வருகிறார்.

இந்தியாமுழுவதிலும் பசுவதை சட்டரீதியாகத் தடைசெய்யப்பட வேண்டும் என்றுகோரி பூரி சுவாமிகள் உண்ணுவிரதமிருந்துவருவது வாசகர்கள் தெரிந்ததே. ஆரம்பத்தில் கங்கை நீரை மட்டும் அருந்தி வந்த இவர் பின்னர் அதனையும் எட்டு அவுன்சாகக் குறைத்து இப்பொழுதுநீர் அருந்துவதையும்நிறுத்திக்கொண்டார்.

நேற்று அரசாங்கத்தின் கோரிக்கைமீது, சர்வகட்சி பசு பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த இரு தலைவர்கள் பூரி சங்கராச்சாரியாரைச் சந்தித்து அரசாங்கத்தின் புதிய முயற்சி சம்பந்தமாக பேச்சு நடத்தினர் ஆனால் இக்கோரிக்கையை ஏற்றுக்கொள்ள இவர் மறுத்துவிட்டார்.

நாடுமுழுவதும் சட்டரீதியாக பசுவதையைத் தடைசெய்வது உள்ளிட்டு, பசு பாதுகாப்பு சம்பந்தமான சகல விஷயங்களையும் ஆராயும்பொருட்டு கமிட்டியொன்றை நியமிக்க அரசாங்கம் முன்வந்திருந்தது. ஆனால் இதனை பூரி சங்கராச்சாரியார் நிராகரித்துவிட்டார்.

உண்ணுவிரதத்தைக் கைவிடுமாறு பாரதியஜனசங்க காரியதரிசியும் நேற்று சங்கராச்சாரியாரைக் கேட்டுக்கொண்டார். வைத்திய அறிக்கையின்படி சங்கராச்சாரியாரின் உடல்நிலை கவலைக்கிடமாகஇருப்பதாகவே தெரியவருகிறது.

## யுதாண்டிற்கு கலாநிதிப்பட்டம்

லண்டன், ஜன 7

ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் மே மாதம் பிரிட்டனுக்கு விஜயம் செய்வார். அவர் பிரிட்டனில் தங்கியிருக்கும் பொழுது இங்கிலாந்திலுள்ள லீட்ஸ் சர்வகலாசாலை அவருக்கு சட்டக்கலாநிதிப்பட்டம் அளித்து கௌரவிக்கும். மே மாதம் 26-ந்திகதி நடைபெறவிருக்கும் இவ்வைபவத்தின்போது கெண்ட் சிமாட்டி யுதாண்டிற்கு இந்தக் கௌரவப் பட்டத்தை வழங்குவார்.

# சூ. என். லாய் மீது செங்காவலர் பார்வை

ஹாங்கொங், ஜன. 7

சீனாவில் காலாச்சாரப் புரட்சியை நடத்திவரும் செங்காவலரின் பார்வை இப்பொழுது சீனப்பிரதமர் திரு: சூ. என், லாய் மீது விழுந்திருக்கிறது:

பீகிங்கில் பல இடங்களிலும் காட்சியளிக்கும் செங்காவலரின் புதிய சுவரொட்டிகளில் திரு. சூ-என் லாய் தாராளமாக இடம் பெற்றுள்ளதுடன் கடுமையான தாக்குதல்களுக்கும் ஆளாகியுள்ளார்.

திதி மந்திரியைப் பாதுகாத்து வருவதுடன் கலாச்சாரப் புரட்சிக்கு எதிராகவும் நடந்துவருகிறார் என்று செங்காவலர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

## நாகாலாந்து பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு?

புதுடில்லி, ஜன. 7

நாகலாந்து பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வொன்று காணும் முதல்முயற்சி இப்பொழுது ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளதாக தலைமறைவு நாகர்கள் பிரதிநிதிகள் கோஷ்டியின் தலைவர் திரு. சுக்காய் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் நடைபெற்ற பேச்சுக்கள் குறித்து அவர் கருத்து வெளியிடுகையில் நாகலாந்து பிரச்னையைத் தீர்க்க நிரந்தரமான முயற்சி இப்பொழுதுதான் மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும் அடுத்த சந்திப்பு நடைபெறும் பொழுது இதில் நல்ல முன்னேற்றம் காணப்படும் என்று தாம் நம்புவதாகவும் கூறினார்.

# 'பசு வதையை உடன் தடைசெய்க'

## நந்தா கோரிக்கை

பாட்னா, ஜன. 7

காலதாமதம் செய்யாமல் நாடுமுழுவதும் பசுவதையைத் தடைசெய்யவேண்டுமென்று முன்னாள் உள்துறை மந்திரி திரு. குல்சாரிலால் நந்தா இங்கு தெரிவித்துள்ளார்.

"இந்தியாவின் பொருளாதார அமைப்புக்கு அடிப்படை விவசாயம். விவசாயத்துக்கு அடிப்படையானது கால்நடைச் செல்வம். இதனுடன் பெரும்பாலான மக்களின் தீவிர உணர்ச்சி சம்பந்தப்பட்டது இது. இதனைஒரு கௌரவப்பிரச்னையாக்கும் முயற்சி ஒருபொழுதும் உதவியாக இருக்காது" என்றும் திரு. நந்தா தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் அபேட்சகர்களின் இரண்டுதின மகாநாட்டின்இறுதிக்கட்டத்தில்பேசுகையில்தான் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## சென்னையில்புதி தொழிற்சாலைகள்

சென்னை, ஜன. 7

சென்னை எண்ணெய்சுத்திகரிப்புச்சாலை, இரசாயன உரத்தொழிற்சாலை ஆகியவற்றின் கட்டடவேலைகளை பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று ஆரம்பித்துவைத்தார். இந்த இரண்டு திட்டங்களுக்கும் தொண்ணூறு கோடி ரூபாய் செலவிடப்படும்.

## பி. பி. ஸி. -யின் சிக்கன நடவடிக்கைகள்

லண்டன், ஜன. 7

சிக்கன நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்குமாறு பிரிட்டிஷ் அரசாங்கம் விடுத்திருந்த கோரிக்கையைத் தொடர்ந்து, பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனம் (பி. பி. ஸி.) தனது சேவைகளில் சில மாற்றங்களைச் செய்துள்ளது.

1950-ம் ஆண்டிலிருந்து பி. பி. ஸி. நடத்தி வந்த அல்பேனிய சேவைகள் இப்பொழுது ரத்துச் செய்யப்பட்டுள்ளன. சில வெளிநாட்டுச் சேவைகளின் நேரமும் மிகவும் குறைக்கப்பட்டுள்ளது. இந்த வரிசையில் மேலும் சில நடவடிக்கைகளைக் கூட்டுஸ்தாபனம் கையாளலாம் என்று பி. பி. ஸி. அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## மூன்று மாதங்களில் ஜெர்மன் மொழி

டிரெஸ்டன், ஜன. 7

ஒன்பது ஆசிய-ஆபிரிக்க நாடுகளிலிருந்து பயிற்சி பெறுவதற்காக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுக்கு வந்துள்ள மாணவர்கள் டிரெஸ்டனில் ஜெர்மன் மொழியைப் படிக்கின்றனர். மூன்றுமாத காலம் ஜெர்மன் மொழியைப் பயின்றபின்னர், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், சர்வ கலாசாலைகளிலும் சேர்ந்து உயர்தரக் கல்வி பயிலுவார்கள். பின்தங்கிய நாடுகளிலிருந்துவரும் மாணவர்களுக்கு ஜெர்மன் மொழியைக் கற்பிப்பதற்கு இங்கு பாடசாலைகள் பல திறக்கப்பட்டுள்ளன.

# சீன அணுகுண்டு பரீட்சையால் ஆபத்து

## அவசரகால நடவடிக்கை ஜப்பான் மேற்கொள்ளும்

டோக்கியோ, ஜன. 7

சீனாவின் அணுகுண்டுப் பரீட்சைகள் இப்போதைய நிலையிலேயே தொடர்ந்தும் நடைபெறுமானால், கதிரியக்க வீழ்ச்சியைச் சமாளிக்க அவசரகால நடவடிக்கைகளை ஜப்பான் மேற்கொள்ள வேண்டியிருக்குமென ஜப்பானிய மந்திரிசபைக்கு அறிவிக்கப்பட்டது.

சோவியத் அணு ஆயுதப் பரீட்சைத்திட்டத்தைவிடச் சீனாவின் ஐந்து அணுகுண்டுப்பரீட்சைகளும் ஜப்பானுக்கு அதிக ஆபத்தான விளைவுகளைக் கொண்டுள்ளதாக விஞ்ஞான, தொழில்நுட்ப ஏஜென்ஸியின் டைரக்டர் ஜெனரல் திரு. சுகுமு நிக்கைடோ கூறினார்.

சீன அணுகுண்டுப்பரிசோதனைகள் அதிக அளவில் விஸ்தரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறதாக மந்திரிகளை எச்சரித்த டைரக்டர் ஜெனரல் நிக்கைடோ, சீனப் பரீட்சைகளின் விளைவுகளுக்கு எதிராகத்தக்க நடவடிக்கைகளை எடுக்குமுகமாகத் தாம் கதிரியக்க எதிர் நடவடிக்கைக்குழு ஒன்றை அமைக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

கதிரியக்க அவசரகால [illegible] கதிரியக்க வீழ்ச்சி பற்றிய விரிவான ஆராய்ச்சியை இது அவசியமாக்கியுள்ளதென அவர் கூறினார்.

மழைநீரைச் சுத்திகரிக்கும்படியும், சந்தைக்கு அனுப்பமுன் மரக்கறிகளை ஒரு குறிப்பிட்ட பாதுகாப்புக் காலத்துக்கு மூடி வைத்திருக்கும் படியும் மக்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள் என அவர் அறிவித்தார்.

கதிரியக்க வீழ்ச்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களைச் சில சந்தர்ப்பங்களில் தியாகம் செய்யவேண்டியும் ஏற்படுமென்றார், அவர்.

(பி. டி. ஐ.)

## 40,000 பேர் வீடிழந்தனர்

கோலாலம்பூர், ஜன. 7

மலேஷியாவின் சில பகுதிகளில் பெய்யும் கடுமையான மழையைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் 40,000 பேர் வீடிழந்துள்ளனர். 75,000க்கும் அதிகமானவர்கள் இருப்பிடங்களிலிருந்து பாதுகாப்பான இடத்துக்கு வெளியேறியுள்ளனர். 1,000க்கு மதிகமான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டன.

**இலங்கை**

# மீன்பிடி கூட்டுஸ்தாபனத்துக்கு பிரிட்டிஷ் இயந்திரசாதனங்கள்

லண்டன், ஜன. 7

இலங்கை மீன்பிடித்துறையை முற்றாக இயந்திரமயமாக்கும் வகையில் இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் 105,000 பவுண் பெறுமதியான இயந்திர சாதனங்களை பிரிட்டனிலிருந்துபெறவிருக்கிறது பீட்டர்ஸ்பரோ நகரிலுள்ள பேர்கின்ஸ் பொறியியல் கம்பனியிடம் இதற்காக கோரிக்கைசமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 4-ந் திகதி லண்டனில் ஆரம்பமான சர்வதேச இயந்திரப்படகு கண்காட்சியின்போது இந்தத் தகவல் வெளியிடப்பட்டது. பேர்கின்ஸ் கம்பனியிடமிருந்து பெறப்படும் இயந்திரங்கள் இலங்கையில் புதிய மீன்பிடிப்படகுகளில் வைத்து இணைக்கப்படும். இதன்மூலம் இலங்கையின் மீன்பிடித்துறையில் உபயோகிக்கப்படும் பேர்கின்ஸ் இயந்திரங்களின் தொகை 1000 மாக அதிகரிக்கும்.

இலங்கை மீன்பிடி கூட்டுத்தாபனம் கட்டுமரம் போன்ற படகுகளுக்கு பதில் பேர்கின்ஸ் இயந்திரங்கள் பொருத்தப்பட்ட வள்ளங்களை இப்போது உபயோகித்துவருகிறது. இந்த இயந்திரமய நடவடிக்கை காரணமாக இலங்கையில் மீன்பிடி பெருமளவு அதிகரித்துள்ளதாக பேர்கின்ஸ் கம்பனியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பிரிட்டிஷ் மந்திரிசபையில் சிறிய மாற்றங்கள்

லண்டன், ஜன. 7

பிரிட்டிஷ் மந்திரிசபையில் செய்யப்பட்டிருக்கும் சில மாறுதல்கள் குறித்து பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்ஸன் அறிவித்துள்ளார்.

முன்னாள் வெளிநாட்டு மந்திரி திரு. பாட்ரிக் கோர்டன் வோக்கர் மீண்டும் மந்திரியாக (இலாகா அற்ற அமைச்சர்) நியமிக்கப்பட்டுள்ளார்.

மந்திரிசபையில் அங்கத்துவம் வகிப்பவர்களின் எண்ணிக்கையும் 23-லிருந்து 21-ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

## சிரமதானம்

சுழிபுரம், சனி

பாரிசன்கூடல் சனசமூக நிலையத்தினர் தமது கிராமத்தில் ஒரு ஒழுங்கைத் தெருவை சிரமதான மூலம் விசாலித்து கல்லுப்பதித்துதார் ஊற்றும் வேலையைச் செய்துவருகின்றனர். இவ்வேலையைச் செய்வதற்குரிய பணத்தை ஊரிலுள்ளவர்களிடமிருந்து திரட்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

விண்வெளியை ஆராய்ந்துசந்திரனுக்குச்செல்ல மனிதன் முயலுகின்றான். ஆனால் அவன் தனது தலைக்கும் இதயத்துக்குமிடையிலுள்ள தூரத்தை இன்னும் சீர்செய்யவில்லையே!

—டாக்டர் கே.ராமச்சந்திரா


# ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Pox 49 JAFFNA
Telegram EELANADU Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு மார்கழி மீ 24 (8-1-67


## ஒலிபரப்புச்சபை நியமனம்

'பிள்ளையார் பிடிக்க குரங்கான கதை' என்பார்கள். இந்த 'கதை' இலங்கை ஒலிபரப்புக்கூட்டுஸ்தாபனம் சம்பந்தமாகவும் நடைபெற்றுவிடக் கூடாது என்பதே பலரது கவலையுமாகும்.

ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன சபை அங்கத்தவர்களை ஒலிபரப்புத் தகவல் அமைச்சர் என்ற முறையில் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா நியமித்திருக்கிறார். ஐந்து அங்கத்தவர்களைக்கொண்ட இந்தச் சபையில் ஒருவர்கூட தமிழர் இல்லை. 'பரந்த மனப்பான்மை, சுயேச்சையாக முடிவு செய்யும் தகுதி, நிறைந்த அனுபவம்' ஆகிய தகுதிகளையுடைய தமிழர் எவருமே இந்நாட்டில் இல்லை என்று பிரதமர் முடிவு செய்து கொண்டாரா? சுயேச்சையான, உறுதியான, உற்சாகமளிக்கக் கூடிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்பக்கூடிய முடிவுகளைச் செய்யக்கூடிய தகுதியுடையவர்களைக் கொண்ட கூட்டுஸ்தாபன சபை நியமிக்கப்பட வேண்டுமென்றே திரு. ஹுலுகல்லே தலைமையிலான வானொலி விசாரணைக் கமிஷன் தனது அறிக்கையில் சிபார்சு செய்திருந்தது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுஸ்தாபனமொன்றில் செய்யப்படும் நியமனங்கள் பொதுவாக 'அரசியல் அடிப்படையிலேயே' அமைந்திருக்கும் என்பதை நன்கு உணர்ந்தே அந்தக்கமிஷன் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபன சபை நியமனத்தில் 'தகுதி' பற்றி வலியுறுத்தியிருக்கவேண்டும். இப்பொழுது பிரதமர் நியமித்துள்ள அங்கத்தவர்கள் நேர்மையும் பண்பும் கல்வியறிவும் உள்ளவர்களாக இருக்கலாம். இது சந்தேகத்துக்கு இடமில்லாமலுமிருக்கலாம். நமது கலை, கலாச்சாரங்களை விருத்தி செய்வதற்கும் 'இலங்கை வானொலி' நிலை மாறி கூட்டுஸ்தாபன சேவையைச்சிறந்தமுறையில் அமைக்கவும் கூடிய 'தகுதி'யும் அனுபவமும் உள்ளவர்கள் தான் தேவை.

இலங்கை ஒலிபரப்பு தமிழ்ச்சேவையின் தரம் உயரவேண்டும். தமிழ்க் கலை, கலாச்சாரம் வளர வானொலி உதவவேண்டும். இதுவே இந்நாட்டுத் தமிழ்மக்கள் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்திடம் எதிர்பார்ப்பவை. ஆனால் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தின் மீதே நம்பிக்கை வைக்க முடியாத அளவுக்குசபை அங்கத்தவர்கள் நியமனம் நடைபெற்றுள்ளது. தமிழர்களின் கலை, கலாச்சாரத்தைக் கண்டு, அரசாங்கம் அஞ்சுகிறதா? தமிழரின் திறமையைக்கண்டு அஞ்சுகிறதா? தமிழ்க் கலை, கலாச்சாரம் இந்த தேவையில்லை என்று விரும்புகிறதா?

தேசியஒற்றுமையையே தனது குறிக்கோள் என்று கூறும் பிரதமர் ஒலிபரப்புக்கூட்டுஸ்தாபன சபை நியமனத்தில் தமிழர் ஒருவரை நியமிக்க மறந்தது ஏன்? தமிழரை மறந்துவிட்டாரா அல்லது தேவையில்லையென மறந்துவிட்டாரா?

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி தமது தந்தியில் சுட்டிக்காட்டியிருப்பது போல் இந்த அநீதியை உடனே களைந்து தமிழரின் கவலையை நீக்கி அவர்கள் நம்பிக்கையைப்பெற பிரதமர் உடனடியாக ஆவன செய்யவேண்டும். தமிழ்மக்களின் ஜனத்தொகை விகிதாசாரத்தைக்கணித்தானது அதன்படி தமிழருக்கு இச்சபையில் பிரதிநிதித்துவமளிப்பதற்காக சபையை விஸ்தரித்து அமைக்கலாம். அதனால் இலாபமே தவிர நஷ்ட மேற்பட இடமில்லை.

## டாக்ஸி டிரைவர்

யாழ்ப்பாணத்திலுள்ள டாக்ஸி டிரைவர்கள் (வாடகைக்கார் சாரதிகள்) பற்றிப் பல புகார்கள் கூறப்படுகிறதென்றும் இது பற்றி நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்னர், அவர்களோடு பேசி அவர்களுக்கு அவர்களது 'கடமை'யை உணர்த்த வடபகுதி பொலிஸ் அதிபர் முன்வந்திருக்கிறார். இது பாராட்டத்தக்க, வரவேற்கத்தக்க விஷயம்.

கொழும்பிலும் மற்றும் சில பகுதிகளிலுமுள்ள வாடகைக்கார் சாரதிகள் பற்றிக்கூறப்படும் புகார்களுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்திலுள்ள வாடகைக்கார்ச் சாரதிகள் பற்றிக் கூறப்படும் புகார்கள் பெரியவையல்ல. யாழ்ப்பாணத்திலுள்ள வாடகைக்கார்ச் சாரதிகளுக்கு பல குறைகள் இருக்கலாம். முக்கியமாக அவர்கள் தங்கி நிற்பதற்கு சரியான இடம் இன்னும் ஒதுக்கப்படவில்லை. இதேசமயம் கார் டயர், டியூப்களும் மற்றும் உப உறுப்புக்களும் பெறுவதிலும் விலை உயர்விலும் அவர்களுக்குப் பலவித கஷ்டங்கள் உள்ளன. இக்குறைகளை நிவர்த்தி செய்துகொள்ள அவர்கள் முயற்சி செய்யவேண்டியதுடன் அரசாங்கமும் அவர்களுக்கு உதவிபுரிய வேண்டியது அவசியமே.

ஆனாலும் வாடகைக் கார்ச் சாரதிகள் பொதுமக்களுக்குச் செய்ய வேண்டியதங்களது கடமையையும் உணர்ந்து நடந்து கொள்ள வேண்டும். குறுகிய இடங்களுக்குச் செல்ல மறுப்பதும் பிரயாணிகளுடன் பண்பற்ற முறையில் நடந்துகொள்வதும் நல்லதல்ல. வாடகைக் கார்ச்சாரதிகளில் நல்லவர்கள் பலர் உண்டு. ஒருசிலர் முறை தவறி நடந்துகொள்வதால் அனைவருக்குமே கெட்ட பெயர் ஏற்பட்டு விடுவது சகஜம். ஓரிரண்டு சாரதிகளின் தவறான நடத்தையால் பெண்கள் வாடகைக் கார்களில் தனியாகப் பிரயாணம் செய்ய அஞ்சுகின்றனர்.

லண்டனில் வாடகைக் கார்ச் சாரதிகளுக்கு விசேஷ பயிற்சியும், அவர்களுக்கென தனியான இலக்கமும் உடையும் வழங்கப்படுகின்றன. உலகிலேயே சிறந்த 'டாக்ஸி டிரைவர்கள்' என அவர்கள் பெயர் பெற்றுள்ளனர். அந்த நிலை இப்போது ஏற்படுவதற்கு அரசாங்கம் உதவியும் ஊக்கமும் வாய்ப்பும் அளிக்கக்கூடிய நிலையில் இல்லை. எனினும் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் எடுக்கும் முயற்சி யாழ்ப்பாணத்திலுள்ள 'டாக்ஸி டிரைவர்கள்' தங்கள் கடமையை உணர்ந்து பொதுமக்களுக்குச் செய்யும் சேவையாகத் தங்களது தொழிலைக் கருதி, தங்களைத் தாங்களே சிறப்பாக்கிக் [illegible]

சென்னை விவேகானந்தா கல்லூரியிலிருந்து பல மாணவர்கள் சமீபத்தில் இலங்கைக்கு யாத்திரையாக வந்தார்களல்லவா? அவர்களுக்கு ஏழு நாட்களுக்குத்தான் 'விசா' கொடுத்திருந்தாராம் சென்னையிலுள்ள இலங்கை உதவி ஹைகமிஷனர். அவர் தங்கள் கல்லூரிக்கும், பிறகு ரயில்வே ஸ்டேஷனுக்கும் வந்து தங்களை அன்புடன் வழியனுப்பிவைத்ததாகவும் ஆனால் ஏழுநாள் விசாவுக்கு மேல் கொடுக்கத் தமக்கு அதிகாரமில்லை என்றும் கொழும்பிலே அதை நீடித்துக்கொள்ளலாம் என்றும் தெரிவித்ததாகத் தெரிகின்றது. அம்மாணவர்கள் கொழும்பு சென்றதும் விசாவைச் சிலநாட்கள் நீடித்து, கதிர்காமம் சென்றுவிட்டு, சென்னைக்குத் தலைமன்னார் மார்க்கமாகத் திரும்பினர்.

யாழ்ப்பாணம் வந்து விமானமூலமே தாய்நாடு திரும்பத் திட்டம்போட்டிருந்தனர். ஆனால் விமானத்தில் இடமில்லாததால் ரயில் மூலம் சென்றதாகவும் தெரிகிறது.

ஃ ஃ ஃ

திருச்சியிலே ஏற்கனவே 35 பேருக்கும் விமானத்தில் இடத்தை 'புக்'செய்தும் தங்களுக்குக் கடைசிநேரத்தில் இடமில்லையென்று கூறிவிட்டதாயும், அதனால் தாங்கள் இரு நாட்களில் வர வேண்டியதாயிற்று என்றும் திருச்சியில் ஏதோ தவறு நடப்பதாகவும் ஒருவித ஏமாற்றத்துடன் சொன்னார்கள்.

திருச்சி வழியாக வந்த மற்றொரு அன்பர், விமானத்தில் இடத்தைப் பல வாரங்களுக்கு முன்பே 'புக்'செய்தும் தமக்கு இடம்கிடைக்கவில்லையென்றும், 'சம்திங்' கொடுத்தால் கிடைப்பதாகத் தாம் கேள்விப்பட்டதாயும், ஆனால் சிலநாள் பொறுத்திருந்து வந்ததாயும், இங்கிருந்து விமானத்துக்கு 'ரிட்டர்ன் டிக்கெட்' எடுத்துச் சென்றவர்கள் பலர் இடமில்லாததால் தனுஷ்கோடி கப்பல்வழியாக வருவதாயும் தெரிவித்தார். கப்பல் வழி எப்படியென்று கேட்டதற்கு கஷ்டமில்லையென்றும் முன்னைவிட வசதியாக இருப்பதாகவும் சொன்னார்.

ஃ ஃ ஃ

திருச்சியில் இலங்கை விமானப் புகாரைப் பற்றி இங்கு ஓர் அதிகாரியை விசாரித்ததில் அவர் கூறியதாவது:

"திருச்சியில் இலங்கை விமானக் காரியாலயம் இப்போது இல்லை. சில வருடங்களுக்குமுன் அவசரப்பட்டு மூடிவிட்டனர். அங்கிருந்த

# ஜயாறன் எழுதுவது

தளவாடங்களையும் மிகக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டார்கள். இந்திய விமானக் காரியாலயம்தான் இலங்கை விமானப்பயணத்துக்கும் டிக்கெட் கொடுக்கின்றது.

முன்கூட்டி டிக்கெட்டை 'புக்'செய்கிறவர்கள் விமானம் புறப்படுவதற்கு முன் குறித்த நாளில் வந்து தங்கள் டிக்கெட்டுகளைப் பதிவு செய்து பயணத்தை ஊர்ஜிதம்செய்யவேண்டும். அப்படிச் செய்யாவிடில், வேறு யாருக்கும் அந்த இடத்தில் பயணம்செய்ய அனுமதித்து விடலாம். இப்படிச் செய்யத் தவறுகிறவர்கள் தான் ஏமாற்றமடைந்து புகார் கூறுகின்றார்கள்" என்று கூறினார்.

இது எப்படியாயினும் திருச்சியிலே இலங்கை விமானக் காரியாலயத்தை மீண்டும் ஏற்படுத்தவேண்டியது மிகமிக அவசியமாகும். இந்தப் பாதையில் இப்போது அதிக லாபம் கிடைப்பதாக அறிகிறேன்.

திருச்சியில் நமது விமானக் காரியாலயத்தை மட்டுமன்றி உதவி ஹைகமிஷனரின் காரியாலயத்தையும் மீண்டும் திறக்கவேண்டியது அவசியமாகும்.

ஃ ஃ ஃ

1967ம் ஆண்டை 'உல்லாச யாத்திரிகர்' ஆண்டாக ஐ. நா. ஸ்தாபனம் அறிவித்துள்ளது. இதை முன்னிட்டு இப்புதுவருடத்திலே விசா கட்டணத்தை வசூலிப்பதில்லை என்று இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம். வெளிநாட்டு யாத்திரீகர்களுக்கு வேறு பல சலுகைகளையும் இந்தியா அளித்துள்ளதாகத் தெரிகிறது.

இலங்கையைப் பார்க்க இந்தியாவில் பல கல்லூரி மாணவர்கள் ஆவலுடன் இருப்பதாயும், ஆனால் செலாவணிக் கஷ்டம் காரணமாக ஒரு கல்லூரி மாணவர்களுக்கு மட்டும் அதுவும் மிகக் குறைந்த செலாவணியே அனுமதித்ததாயும் கிறது.

இலங்கை மாணவர் பலரும் இந்தியாவைப் பார்க்க ஆவலுடன் உள்ளனர். இலங்கைக்கும் செலாவணிக் கஷ்டம்தான். என்றாலும் இந்த 'உல்லாச யாத்திரை' ஆண்டிலே இவ்விரு அண்டை நாடுகளும் பரஸ்பர முறையில் செலாவணி நஷ்டம் ஏதுவுமின்றி கல்லூரி மாணவர்களுக்கும், யாத்திரீகர்களுக்கும் பிரயாண அனுமதி அளிக்கமுடியாதா?

ஃ ஃ ஃ

கொழும்பிலே மத்திய வங்கி ஊழியர் வேலைநிறுத்தம் மூன்று வாரங்களாக நடக்கிறது. அதனால் செலாவணி பெறமுடியாமல் யாத்திரீகர்கள் சங்கடப்படுவதாகச் சிலர் புகார்தெரிவிக்கின்றனர். இவ்வேலைநிறுத்தத்தை உடன் சுமுகமாகத் தீர்க்கவும் அதற்கிடையே செலாவணி அளிக்க மாற்று ஏற்பாடுசெய்யவும் வேண்டியது அரசாங்கத்தின் கடமை. 'உல்லாச யாத்திரை' ஆண்டிலே இலங்கையர் வெளிநாடுகளில் யாத்திரைசெய்ய அரசாங்கம் விசேஷ வசதியைச் செய்யாவிடினும், பழைய வசதிகளையாவது தடையின்றி அளிக்கவேண்டாமா?

ஃ ஃ ஃ

நிற்பனவும் நடப்பனவும் நிலமும் நீரும் நெருப்பினொடு காற்றாகி நெடுவானாகி, அற்பமொடு பெருமையுமாய் அருமையாகி அன்புடையார்க் கெளிமையதாய் அளக்கலாகாத் தற்பரமாய் சதாசிவமாய்த் தானும் யானும் ஆகின்ற தன்மையனை நன்மையோடும், பொற்புடைய பேசக் கடவோம் பேயர் பேசுவன பேசுதுமே பிழையற்றோமே.

—அப்பர் சுவாமிகள்.

# ஊதாரிகள் ஆண்களே

கொக்குவிலைச் சேர்ந்த செல்வி சோ. ப. சக்தி என்னும் பெண்மணி பின்வருமாறு எழுதுகிறார்.

7-ந் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் 'நாட்டிலும் நகரிலும்' பகுதியில் 'வழிப்போக்கன்' எழுதிய 'படித்த பெண்களே!' என்ற விஷயம் படித்தேன். ஏன் அவர் இப்படிப்படித்து உத்தியோகம் பார்க்கும் பெண்கள் மீது இவ்வளவு துவேஷம் கொண்டுள்ளார் என்பது விளங்கவில்லை. பல பெண்கள் உத்தியோகம் பார்க்கிறார்கள். அவர்களது ஊதியம் அவர்கள் குடும்பச்செலவுக்கு எவ்வளவு தூரம் உதவுகிறது என்பது 'வழிப்போக்க'னுக்கு ஒருவேளை தெரியாமலிருக்கலாம். அப்பெண்களது பெற்றோருக்குத்தெரியும். வீணாக பவுடர், சோப், சேலை முதலியவற்றிற்கு செலவு செய்ய அவர்கள் ஆண்கள் போல் அவ்வளவு ஊதாரிகள் அல்ல. தேவையான அளவு பவுடர், சோப், சேலை வாங்குகிறார்கள்தான். உத்தியோகம் பார்க்காத பெண்கள் வாங்குவதில்லையா? பாவிப்பது தான் இல்லையா?

உத்தியோகம் பார்க்கும் ஆண்களின் ஊதியம் முழுமையாக வீடு செல்வது மிக அபூர்வம். வழி, தெருவிலேயே அவர்கள் 'அனாவசியச் செலவு' செய்துவிட்டு வீட்டில் காரணம் கேட்டால் அதற்கும் ஒரு பொய்சொல்லி விடுவார்கள்!

"பெண்கள், இயற்கையான பால்கவர்ச்சி, அழகு, ஜாலம், மோகம், மென்மை, பலவீனம், பாசாங்கு, கண்ணீர் இவையெல்லாம் உபயோகித்து, பல திருகுதாளங்களால் ஆணை மருட்டிவிடுவாள். அதனால் தான் அவர்களுக்கு இலகுவாக உத்தியோகம் கிடைக்கிறது" என்று எழுதுகிறார். வெட்கக்கேடு, தங்கள் பலவீனங்களால் தங்களுக்கு உத்தியோகம் கிடைப்பதில்லை என்ற ஒரு காரணத்துக்காக ஏன் இப்படி வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ள வேண்டும். பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதற்கு முக்கிய காரணம் நேர்மையாகவும். கடமையுணர்ச்சியுடனும், பொறுமையாகவும், கவனமாகவும் கொடுத்தவேலையை பொறுப்பாகவும், துப்புரவாகவும்செய்து முடிக்கும் திறன் அவர்களிடமுண்டு. அதேகாரணத்துக்காகத்தான் பெண் வேலைவாய்ப்புப் பெறுகிறார்களேயன்றி, கேவலம் தங்சாகசங்களினால் அல்ல. இதைஉணரமாட்டாதவர்கள்தான் அப்படியான தவறான அபிப்பிராயங்கள் கொண்டுள்ளார்கள்.

குடும்பத்தில் ஒவ்வொரு பெண்கள் நாட்டிலும் தங்கள் உண்மையான உழைப்பை நம்பி அதனால் நாடும் முன்னேறவழி செய்கிறார்கள். வீடுவாழ, நாடு வாழ, உலகம்வாழ பெண்கள்தான் காரணம் என பெரியார்கள் கூறியிருப்பதை நினைவு கூருவது நல்லது. 'வழிப்போக்கன்' நல்வழியில் போவதே நல்லது.

—

## இந்தியாவிஜயம்

புதுடில்லி, ஜனவரி மேற்கு ஜெர்மன் பிரதமர் இந்தியாவுக்கு விஜயம்செய்யவிருக்கிறார்.

## முதல் தடவையாக ஒதுக்கப்பட்ட ஸ்தானம்

கொழும்பு, வெள்ளி

சுன்னாகம் பட்டினசபையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் இரண்டு வட்டாரங்களை ஒன்றாக இணைப்பதற்கான யோசனையை எல்லை நிர்ணயக் கமிஷன் தெரிவித்துள்ளது.

சுன்னாகம் பட்டினசபை எல்லையுடன் உடுவில் பட்டினசபையின் சில பகுதிகளையும் இணைந்து விரிவுபடுத்துவது சம்பந்தமாக திரு. எஸ். தம்பித்துரை தலைமையில் நியமிக்கப்பட்டிருந்த கமிஷன் தனது சிபார்சுகளை ஸ்தலஸ்தாபன அமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்கள் தமது அபிலாஷைகளைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் தமக்கென பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். சாதி அடிப்படையில் வட்டாரங்கள் ஒதுக்கப்படுவது பொருத்தமில்லாவிடினும் தாழ்த்தப்பட்ட மக்களும் தமக்கெனப் பிரதிநிதித்துவம் ஏற்படுத்திக்கொள்ள வகைசெய்வது நியாயமென்று தாம் கருதுவதாக கமிஷன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சுன்னாகம் பட்டினசபையின் 3-ம் 4-ம் வட்டாரங்களை ஒன்றாக இணைத்து புதிய விரிவான வட்டாரம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்று கமிஷன் தெரிவித்துள்ளது. இந்த வட்டாரத்தில் 760 வாக்காளர் இருப்பர் என்றும் இவர்களில் 450 பேர் தாழ்த்தப்பட்டவர்களென்றும் கமிஷன் குறிப்பிட்டுள்ளது.

## வலிமேற்கு பாடசாலைகளில் கமத்தொழில் பயிற்சி

### அதிபர்கள் முயற்சி

சங்கானை, சனி

பாடசாலைப்பிள்ளைகளுக்கு அதிமுக்கிய பாடமாகக் கமத்தொழிற்பயிற்சி கிழமைகளில் கூடியநேரம் அளிக்கப்படவேண்டுமென அரசாங்கம் கல்வி இலாகாவுக்கு ஒரு சுற்றுநிருபம் அனுப்பியுள்ளதைத் தொடர்ந்து வலிகாமம் மேற்கில் உள்ள சகல பாடசாலைகளிலும் எதிர்வரும் 11-ம், 12-ம் திகதிகளில் முக்கியமாக முழுநேரமும் மறுதினங்களில் இதை ஓர் பாடமாகவும் கணித்து கமத்தொழில் பயிற்சி அளிக்கவேண்டிய ஏற்பாடுகளைப் பாடசாலை அதிபர்கள் மேற்கொண்டுள்ளனர். இதில் பற்றைகளை வெட்டுதல், நிலத்தைப் பண்படுத்தல், பயிர்நாட்டல் ஆகியன அடங்கியுள்ளன. இந் நிலங்களில் ஆரம்பமாக வெங்காயம், மிளகாய், கிழங்குவகைகள் நாட்டப்படும். ஒவ்வோர் பாடசாலைகளிலும் ஆரம்பிக்கப்படும் கமத்தொழில் பயிற்சி போட்டியாகக் கருதப்பட்டு பயிர்களின் விளைச்சல் மதிப்பீடுசெய்யப்படும் இதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டு அவர்களின் தீர்ப்புப்படியே பரிசில்கள் வழங்கப்படும்.

இதேபோல் பாடசாலை மாணவர்கள் வீடுகளிலும் சிறுதோட்டங்கள் ஆரம்பித்தால், அவைகளும் அதிகாரிகளால் மதிப்பீடுசெய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். இப்படியான உப உணவு உற்பத்தித்திட்டத்திற்கு வலிமேற்குப் பகுதிகளில் உள்ள அனேக பெற்றோர் ஆசிரியர்சங்கங்களும் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுப்பதாக முன்வந்துள்ளன. இதற்கான சகல ஏற்பாடுகளிலும் சங்கானை கமத்தொழில் விஸ்தரிப்பு இலாகா அதிகாரிகள் பங்கு பற்றி பயிற்சியுமளிப்பர் எனத் தெரியவருகிறது.

## "உணவு நெருக்கடியை தீர்க்க உதவுவோம்"

### அமெரிக்க பிரதிநிதி உறுதி

புன்னாலைக்கட்டுவன், சனி

"ஒருபக்கம் பெருகிவரும் சனத்தொகை. மறுபுறம் உணவு நெருக்கடி. இந்நிலையில் நேற்று போஷாக்குத் திட்டத்தின் மூலம் நிலைமையைச் சமாளிக்க முடியும். மக்கள் பொருளாதாரவளத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதுடன் போஷாக்குள்ள உணவு வகைகளையும் உற்பத்தி செய்ய எமது திட்டம் உதவும் இத்திட்டத்தை பயிற்சியும் கல்வியும், உணவு உற்பத்தி, நுகர்வு ஆகிய ஆகிய மூன்று வகையாகப் பிரிக்கலாம். இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்வது மக்களின் கடமையாகும். இவ்வாறு வரெழு மாதர்சங்கம், கிராமாபிவிருத்திச்சங்கம், இளைஞர் விவசாயக்கழகம் ஆகிய தாபனங்களின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் உரை நிகழ்த்திய பிரயோக போஷாக்குத் திட்ட தலைமை அதிகாரி திரு. டி. சில்வா கூறினார்.

வரெழு மாதர் சங்க உபதலைவி செல்வி தங்கலெட்சுமி நாகேந்திரத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமெரிக்கப் பிரதிநிதியாக உரை நிகழ்த்திய செல்வி ஆர். ஜி. மார்க்ரோஷ் கூறியதாவது:

"இந்நாட்டு மக்களின் உணவுப்பிரச்னை உட்படப் பல பிரச்னைகளையும் தீர்க்க நாம் முன்வந்துள்ளோம். இந்நாட்டுப் பொதுமக்களுடன் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடியதன் மூலம் அவர்களது கஷ்டங்களை நாம் நன்கு உணர்ந்து கொண்டோம். சகல பிரச்னைகளுக்கும் தீர்வு காண முயலுவோம்.

## விறகு இல்லாது பொதுமக்கள் கஷ்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

திருநெல்வேலி அரசினர் விறகுசாலையில் கடந்த சில வாரங்களாக விறகு இல்லாததைத் தொடர்ந்து பொதுமக்கள் வனபரிபாலனப்பகுதி அதிகாரிகளுக்குப் புகார்செய்துள்ளனர்.

பெருந்தொகையான கருப்புத் தொழிற்சாலைகளுள்ள இடத்தில் விறகில்லாததால் கோடா முதலியன போட முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தொழிலாளர்கள் வேலைசெய்ய முடியாதிருக்கிறது.

## ஒய்வு பெறுகிறார்

உடுப்பிட்டி, சனி

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் அதிபரான திரு. க. பூரணம்பிள்ளை இவ்வருட முதல் தவணையுடன் ஒய்வு பெறுகிறார். ஆசிரிய [illegible] வருட கால [illegible]

இவர் வடமதியிலுள்ள பல பிரபல கல்லூரிகளில் அதிப[illegible]

## தீர்மானம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், சனி

சிறுபான்மைத் தமிழர் பிரச்னை சம்பந்தமாக பிரதமரைப் பேட்டி காணும் விஷயத்தில் எழுந்த சச்சரவினால் சிறுபான்மைத் தமிழர் ஐக்கியமுன்னணியில் உள்ள சில கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் முன்னணி மீது கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

சிறுபான்மைத் தமிழரின் ஆலயப் பிரவேசம், தேநீர்க்கடைப் பிரவேசம் சம்பந்தமாக மேற்படி முன்னணியைச் சேர்ந்த தூதுக்கோஷ்டியொன்று பிரதமரைப் பேட்டி காண்பதென அண்மையில் நடைபெற்ற முன்னணியின் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பிரதமரைப் பேட்டி காணுவதால் எந்த நன்மையையும் அடைய முடியாதெனவும், இது வெறும் பிரசாரமும், செலவுமே அன்றி, எந்தப் பிரச்னையுமே பிரதமரைக்கொண்டு தீர்க்கமுடியாதென்றும் சிறுபான்மைத் தமிழர் முன்னணியிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர் கண்டனம் தெரிவித்ததைத் தொடர்ந்து பிரதமரைப் பேட்டி காணும் விஷயம் கைவிடப்பட்டுள்ளதாக சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார். (ந. நி.)

## போனஸ் பாகுபாடு பற்றி எம். பி. புகார்

யாழ்ப்பாணம், ஞாயிறு

இ. போ. ச. ஊழியர்களுக்கு 'போனஸ்' பணம் வழங்கப்படுவதில் காட்டப்படும் பாகுபாடுபற்றி அவசர கடிதமொன்றை கோப்பாய் எம். பி. திரு. எம். கதிரவேற்பிள்ளை இ. போ. ச. தலைவர் திரு. ஆர். பி. டி. சில்வாவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இ. போ. ச. சுற்றறிக்கையில் 'போனஸ்' பணம் பற்றி காட்டப்பட்டு விளக்கங்கள் பிழையானவையாகவிருப்பதாகவும். 'போனஸ்' பணத்தை நீதியான முறையில் கணக்குப்பார்த்து ஊழியர்களுக்கு வழங்குமாறும் அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (ந. நி.)

யாழ்ப்பாணம்

## உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் அசிரத்தை

மானிப்பாய், சனி

மானிப்பாயிலுள்ள தனிப்பட்ட பலசரக்குக்கடைகள், மாவு, மல்லி, மிளகாய் போன்ற அத்யாவசிய உணவு பொருட்களைப் பதுக்கி, கொள்ளை இலாபத்திற்கு விற்றுவருகையில், ஒரு பலசரக்குக்கடைக்காரர் உணவுக்கட்டுப்பாட்டதிகாரியால் எச்சரிக்கை செய்யப்பட்டும், பொதுநிலைமை இன்னும் சீர் அடையாது மோசநிலையை அடைந்து கொண்டிருக்கிறது, மிளகாய், மல்லி இரவு நேரங்களில் பின்வாசல்வழியாக அதிகமான கடைகளில் விற்கப்படுகிறது. 'ஈழநாடு' செய்தியைத் தொடர்ந்து இன்று அநேகர் யாழ். உணவு கட்டுப்பாட்டு இலாகாவுக்கு பதுக்கல் விபரம் பற்றி டெலிபோன் செய்தபோது, குறிப்பிட்ட அதிகாரிகள் அசிரத்தையாக மறுமொழிகூறியதோடு, உடனடி நடவடிக்கையொன்றும் எடுக்காது, வேண்டாவெறுப்பாக, முறைப்பாடுகளை காகிதத்தில் எழுதி அனுப்பும்படி கேட்டனர் இதனால் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

## "அறிக்கைவேண்டாம் பொருள்களே வேண்டும்"

அரிசித் தட்டுப்பாட்டை முன்னிட்டு நாம் அரிசிக்குப் பதிலாக மாவையே கூடுதலாக நம்பி இருக்கிறோம். ஆனால் தற்பொழுது எங்கள் பகுதி கூட்டுறவுச் சங்கங்களும், மற்ற வர்த்தக ஸ்தாபனங்களும் ஒரு கூப்பனுக்கு ஒரு இறாத்தல் மாவுக்கு மேல் விநியோகம் செய்கிறார்களில்லை. அரிசிக்குத் தட்டுப்பாடு உண்டு என்று ஒப்புக் கொள்ளும் அதே வேளையில் மாவுக்கும் தட்டுப்பாடு என்றால் ஏழை மக்களாகிய நாம் எப்படி எங்கள் பசிப்பிணியைப் போக்க முடியும். கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் போதியளவு மாவு வழங்கப்பட்டிருந்தால் அத்தியாவசியத் தேவைக்குரிய மாவு வழங்காததன் மர்மமென்ன? இது கூட்டுறவுச் சங்கங்களின் மோசடியா? யார் காரணம்?

மிளகாய் கட்டுப்பாட்டு விலைக்குக் கிடைக்குமென்றும் அதற்குமேல் கூடுதலான பணம் கொடுத்து மிளகாய் வாங்க வேண்டாமென்றும் யாழ்ப்பாண உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி அறிவுரை கூறியிருந்தார். இதுவும் விசித்திரமாகவே தென்படுகிறது. இவர்களுடைய அறிக்கையை நம்பி பல விற்பனை நிலையங்களுக்கும் சென்று மிளகாயும் மல்லியும் கேட்டபோது பெருங்கவலையும் ஏமாற்றமும் அடைந்தேன். எனவே அறிக்கை விடுவதிலும் பார்க்க மக்களின் துயரை எண்ணி அத்தியாவசிய உணவுப் பொருள்களை தக்கவாறு வழங்க யாழ்ப்பாண உதவி உணவு கட்டுப்பாட்டு அதிகாரியும் வடபகுதி எம். பி.க்களும் முன்வருவார்களா?

ச. வீரவாகு
ஆனைக்கோட்டை.

## அரிசியும் இல்லை; மாவும் இல்லை

சென்ற இருகிழமைகளாக நமது அரசாங்கம் அரிசித் தட்டுக்குறை காரணமாக பங்கீட்டரிசியை அரைப் பங்காகக் குறைத்து இலவசமாக வழங்கிவருவது யாவரும் அறிந்ததே. போதிய அளவு மாவு பெறமுடியுமெனப் பிரதமர் அறிவித்திருந்தார். ஆனால் நமது பகுதியாகிய [illegible] சமாசத்தில் அரிசி எடுத்தாலும் மாவுஎடுக்க முடியவில்லை. சென்ற கிழமை ஒரு கூப்பனுக்கு இரண்டுறாத்தல் மாவுவீதம் கொடுத்தார்கள். இந்தவாரம் ஒரு கூப்பனுக்கு ஒரு றாத்தல்மாவீதம் கொடுக்கிறார்கள். இப்பகுதி மக்கள் பெரும்பாலும் கூலியாட்களே தவிர கமக்காரர்கள் குறைவு. ஆதலால் மக்கள் அரிசியுமின்றி மாவுமின்றித் தவிக்கிறார்கள். மிளகாய், மல்லி மருந்துக்கும் கிடைக்காது. இக்குறையை இப்பகுதி மேலதிகாரிகள் கவனித்து மாவின் கோட்டாவை அதிகரிப்பார்களா?

வி. மகாலிங்கம்
முகமாலை.

## 28 இரட்டைத்தட்டு பஸ்கள் வந்தன

கொழும்பு, சனி

இலங்கைப் போக்குவரத்துசபைக்காக, 28 இரட்டைத்தட்டு பஸ்கள் நேற்று லண்டனிலிருந்து இலங்கை வந்துசேர்ந்தன.

இவற்றுள்சில இரட்டைத்தட்டுபஸ்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படுமெனத் தெரியவருகிறது.

## அரசாங்கம் கவனிக்குமா?

கட்டுப்பாட்டு இலாகா அதிகாரி மாவுக்குத் தட்டுப்பாடு இல்லையென்றும் மாவு போதியளவு இருக்கிறதென்றும் கூறியபோதிலும் பரந்தன் கடைகளில் மாவு இல்லை. மாவிற்காக கியூவில் நின்று மாவின்றி மனமுடைந்து வீட்டிற்குச்செல்லுகின்றனர் மக்கள்.

கடைகளில் மாவுத்தட்டுப்பாடு. சாப்பாடு ரூபா 1.25. மல்லி, மிளகாய், புளி முதலியனவுமில்லை. ஏழை மக்கள் என்ன செய்வது? அரசாங்கம் கவனிக்குமா?

'[illegible]'
கிளிநொச்சி

## சந்தேகநபர் பற்றி விபரம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் குழந்தை ஒன்றின் இரண்டு தங்கக் காப்புகளை களவாடுகையில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதாகக்கூறப்படும் ஜயக்கொடி ஆராச்சிகே சரனலிஸ் என்ற இருபத்திநான்கு வயது இளைஞர் யாழ்ப்பாணம் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். இவர் குருநாகலையைச் சேர்ந்தவர் எனப் பொலிஸ் விசாரணையின் போது தெரியவந்துள்ளது. இவரைப் பற்றிய தகவல்களைக் கோரி யாழ்ப்பாணம் குற்றப்பகுதி இன்ஸ்பெக்டர் திரு. சிவபாதம் குருநாகலை, அனுராதபுரம்பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார். (ந. நி.)

## கூட்டுறவு மனேஜர் பயிற்சி பெறவேண்டும்

புன்னாலைக்கட்டுவன், சனி

எதிர்காலத்தில் கூட்டுறவுப் பண்டசாலை மனேஜர் பயிற்சி பெற்றிருக்கவேண்டுமென விதிக்கப்பட்டுள்ளது. இவ்விதி விதிகளை மீறும் பண்டசாலைகளுக்கு பசளைகள் முதலியன விநியோகிக்கப்படாதெனத் தெரிகிறது.

கூட்டுறவுப் பரிசோதகராக நியமிக்கப்படுவோர் 19 வயதுக்கும் 25 வயதுக்கும் உட்பட்டோராக இருக்கவேண்டும். இதுவரை 23 வயதுக்கும் 31 வயதுக்கும் உட்பட்டோர் நியமிக்கப்பட்டு வந்தனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த மதத்தில் தீண்டாமை இல்லையாம்

## போயாதின விழாவில் பிக்குவின் உரை

மானிப்பாய், சனி

"பேரரசனாகவிருந்த கௌதமபுத்தர் துறவியான சம்பவத்தைக் கொண்டாடுகிறோம். போயா தினங்களை விடுதலை தினமாக்கிய அரசாங்கத்தைப் பாராட்டுகையில், இத்தினத்தைக் கொண்டாடும் ஒவ்வொருவர் மனதிலும் இதன் முக்கியத்துவம் பதிய வேண்டும். கடவுளைத் தமது உடைமையாக வைத்துக்கொள்ள தமிழர் சமூகத்தின் ஒரு பிரிவினர் எண்ணுகின்றனர். ஏனைய சிறுபான்மைச் சமூகத்தினரைப் புறக்கணிக்கின்றனர். ஆனால் பௌத்த மதத்திலே இவ்வித வேறுபாடுகளில்லை" என தமிழ் பௌத்த சங்கத் தலைவர் திரு. ம. வயிரமுத்து 4-1-67 அன்று புத்தூர் மஞ்ஞுசிறீ சிங்கள பௌத்த பாடசாலையில் நடைபெற்ற போயாதின ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசும்போது கூறினார்.

யாழ்ப்பாண சிறி நாக விகாராதிபதி கடவத்துவே நந்தாராமநாயக்க தேரோ பேசுகையில், 2500 ஆண்டுகளுக்குமுன் ஆரம்பிக்கப்பட்ட பௌத்தம் இன்று 60 கோடி மக்களால் ஏற்கப்பட்டுள்ளதென்றும், எனவே சிங்கள மக்களுக்கு மாத்திரம் பௌத்தம் உரியதல்லவென்றும், சகல சாதி இன மக்களுக்கும் ஏற்றத்தாழ்வில்லாமல் ஒன்றே குலம் என்பதற்கமைவாகவுள்ளதென்றும், சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு பௌத்தம் வரப்பிரசாதமென்றும் அது தீண்டாமைக்கு விரோதமானதென்றும் கூறினார்.

விசேட அழைப்பாளராகக் கலந்துகொண்ட வண. உணவட்டுனே ஞானரத்தின தேரோ அழகாகத் தமிழில் உரையாற்றுகையில், பௌத்தம் இந்தியாவில் உதித்து அகில உலகமும் பரவியிருக்கிறதென்றும், ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை சிறப்பாக பௌத்தத்திற்கு முதலிடம் கொடுத்திருப்பதையும் சுட்டிக்காட்டி, சமதர்ம அரசாங்கம் உதயமாகில் சிறுபான்மைத் தமிழரின் இன்னல்கள் அழிந்துவிடுமென்று கூறினார்.

திருவாளர்கள் ப. சின்னத்தம்பி, கே. தவசிப்பிள்ளை, எம். இரத்தினசாமி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். பின் கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## கூப்பன் புத்தகங்களை பலர் ஒப்படைத்தனர்

கொழும்பு, சனி

மாகாணங்களிலிருந்து வந்த பலர் தமது கூப்பன் புத்தகங்களை நேற்று பிரதமரிடம் ஒப்படைத்தனர். இவைகளை ஏற்றுக்கொண்ட பிரதமர் இவர்களுக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்தார்.

## விரும்பினால் பணம்கொடுக்கலாம்

கொழும்பு, சனி

கூப்பனுக்கு தாம் பெறும் அரிசிக்கான பணத்தை செலுத்த விரும்புவர்கள் அவ்விதம் செலுத்தக் கூடிய வகையிலான ஒரு திட்டத்தை உணவு அமைச்சு தயாரித்துள்ளது. இந்தத் திட்டத்தின்படி பணம் செலுத்த விரும்புபவர்கள் அந்தந்தப் பகுதி உணவு உதவிக் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் மாதமொருமுறை தமது கூப்பன் அரிசிக்கான பணத்தைக் கொடுக்கலாம்.

## குடியேற்றப் பகுதிக்கு தந்தி வசதி

கிளிநொச்சி, சனி

கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்த வட்டக்கச்சி என்னும் குடியேற்றத் திட்டத்துக்கு இம்மாதம் 11ந் தேதி தொடக்கம் தந்தி வசதிகள் செய்ய ஒழுங்குகள் நடைபெறுகின்றன. வட்டக்கச்சி உபதபாற்கந்தோரில் தந்தி இணைப்பு வசதியை கிளிநொச்சி எம்.பி. திரு. கா. பொ. இரத்தினம் ஆரம்பித்துவைப்பார்.

## முன்னேற்றம்

கொழும்பு, சனி

துறைமுக கூட்டுத்தாபனம் சென்ற வருடத்தில் 3,055,213 தொன் நிறையுள்ள சரக்குகளைக் கையாண்டது. இதுவரை கையாண்ட தொகைகளில் சென்ற வருடத்திலேயே மிகக் கூடுதலான தொகை எனத் தெரிவிக்கப்பட்டது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித் திரட்டு

## பிடிக்கன்றுகள் களவு

சுழிபுரம், சனி

இங்குள்ள வயலொன்றில் மேடை போடப்பட்டு நன்கு வளர்ந்துநின்ற பிடிக் கன்றுகள் இனந்தெரியாத நபர்களால் களவாடப்பட்டுள்ளது. பனிப்புலத்தைச் சேர்ந்த இராசரத்தினம் என்பவர் தமது காணியை பிடிக் கன்றுகள் நடுவதற்கு செப்பனிட்டு அடுத்தநாள் கன்று நடுவதற்கு ஏற்ற ஆயத்தம் செய்திருந்தார். அடுத்தநாள் கன்று நடச் சென்றபோது மேடையில் இருந்த தொள்ளாயிரத்து ஐந்து வீதமான சுமார் ஆயிரங் கன்றுகள் கள்வர்களால் பிடுங்கப்பட்டுள்ளன.

ஃ ஃ ஃ

பூநகரி, சனி

பூநகரி மகாவித்தியாலயமும் சிரமதான முறையில் வீதியொன்றை அமைக்கத்திட்டமிட்டுள்ளது. பிரதான வீதியிலிருந்து மகாவித்தியாலயத்துக்குச்செல்ல இதுவரையும் சீரான பாதை இருக்கவில்லை. வித்தியாலய சிரமதானமூலம் இக்குறை விரைவில் தீருமென நம்பப்படுகிறது.

## தனி இலாகா

வவுனியா, சனி

வவுனியா அரசாங்க அதிபரின் நேரடி மேற்பார்வையின்கீழ் உணவு உற்பத்தி இலாகா ஒன்று இம்மாதம் தொடக்கம் வவுனியா கச்சேரியில் செயல்படத்தொடங்கியுள்ளது.

விவசாயிகளின் கஷ்டங்களை தீர்ப்பதுவும் அதிக உணவு உற்பத்தி பெருக்கத்தில் ஈடுபட்டு நாட்டில் உணவு உற்பத்தியைப்பெருக்க உதவுவதுமே இதன் நோக்கம்.

ஃ ஃ ஃ

## வித்திய ஆலோசகர் அழைப்பு

பூநகரி, சனி

கிளிநொச்சி வட்டார வித்திய ஆலோசகராக மாற்றம்பெற்றுவந்த திரு. பி. எஸ். குமாரசாமி இம்மாதம் எட்டாந் திகதி கிளிநொச்சியின் சகல தலைமையாசிரியர்களையும் கல்லூரி அதிபர்களையும்மகாநாடொன்றுக்கு அழைத்துள்ளார், கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும் இம்மகாநாட்டில் இவ்வாண்டிற்செய்யப்படவேண்டிய வேலைத்திட்டங்கள் பற்றி ஆலோசிக்கப்படும்.

ஃ ஃ ஃ

## அரசாங்க உதவி

அளவெட்டி, சனி

தையிட்டி கிராமமுன்னேற்றச்சங்க நெசவு நிலையத்திற்கு நெசவுத் தறிகளையும் மற்றும் உபகரணங்களையும் இம்மாத நடுப்பகுதியில் குடிசைக் கைத்தொழில் இலாகா அதிகாரி வழங்கவிருக்கிறார்.

இந்த நெசவுநிலையத்திற்கு அளவெட்டி வடக்கு நெசவு நிலையத்தில் கடமையாற்றிய திரு. எஸ். சச்சிதானந்தமூர்த்தி போதனாசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## தலைவர் தெரிவு

வவுனியா, சனி

வவுனியா நகரசபைத்தலைவர் தெரிவு இம்மாதம் 9-ம் திகதி வவுனியா நகரசபை மண்டபத்தில் வட கிழக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. க. நல்லைநாதன் தலைமையில் நடைபெறும்.

ஃ ஃ ஃ

## பூநகரியில் சிரமதானம்

பூநகரி, சனி

பூநகரி படித்த இளைஞர் முன்னேற்றச் சங்கம் பூநகரியில் வாசிகசாலையில்லாக் குறையைத் தீர்க்க முன்வந்துள்ளது. இதற்கான இடத்தை பூநகரி கிராம சபை கொடுத்துள்ளது. சிரமதான அடிப்படையில் அத்திவாரம்வெட்டப்பட்டு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. விரைவில் இதனை பூர்த்தி செய்வதில் வாலிபர்கள் மும்முரமாக இறங்கியுள்ளார்கள்.

ஃ ஃ

## வித்தியாதிபதி உத்தரவு

'புள்ளுலைக்கட்டுவன் சனி

இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளிலும்ஆங்கிலம் போதிக்கத் தகுதிவாய்ந்தவரெனக் கருதப்படும் ஆசிரியர் தொடர்பான புள்ளி விபரங்களைத் திரட்டுமாறு உதவி வித்தியாதிபதிகளுக்கு வித்தியாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாண்டு மே மாதம் நடைபெறவிருக்கும் ஆசிரியர் இடமாற்றங்களுக்கு இது ஒரு முன்னோடியாகக் கருதப்படுகிறது.

ஃ ஃ ஃ

## சிறுமியின் அதிர்ஷ்டம்

இமையாணன், வெள்ளி

ஏழு வயதுச் சிறுமி மரமொன்றில் ஏறித் தவறி விழுந்ததால் சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவம் ஒன்று உடுப்பிட்டி சந்தைக்கண்மையில் நிகழ்ந்துள்ளது. உடுப்பிட்டி சந்தைவீதியில் உள்ள ஒரு வீட்டில் அவ்வீட்டிலுள்ள ஏழு வயது மதிப்பிடத்தக்க புவனேஸ்வரி என்ற இச்சிறுமி மரத்தில்ஏறியபொழுது, தவறுதலாக அம்மரத்துக்கு கீழே உள்ள வீட்டுக்கூரை மீது விழுந்து உருண்டபடியே நிலத்தில் விழுந்தாராம்.

சிறுமி சிறு காயங்களுடன் உயிர்தப்பினார்.

## விவசாயத்தில் பட்டதாரிமாணவர்கள்

கொழும்பு, சனி

பல்கலைக்கழக மாணவர்கள் விவசாயத்தில்ஈடுபட்டு நாட்டின் உணவுப் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதில் உழைக்க இருக்கிறார்கள். பல்கலைக்கழகங்களினுள் பயிர்ச்செய்கைக்குகந்த ஒவ்வொரு அங்குல நிலமும் உபயோகப்படுத்த ஆண்-பெண் உட்பட 5000 பட்டதாரி மாணவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

## இடமாற்றம்

சுழிபுரம், வெள்ளி

வலிமேற்கு விவசாயவிஸ்தரிப்புக்கந்தோரில் உணவு உற்பத்தி மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய திரு எ. குமாரசாமி கோண்டாவில் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

புள்ளுலைக்கட்டுவன்வெள்ளி

திருகோணமலை ஸ்ரீசண்முக வித்தியாலய உயிரியல் ஆசிரியைதிருமதி. எஸ். அப்புத்துரை இம்மாதத்திலிருந்து உடும்பராய் இந்துக்கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய உதவி ஆசிரியர் திரு. சின்னப்புலிகோசி, வதிரி திருஇருதயக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளார். திரு. வேலுப்பிள்ளை இம்மாத ஆரம்பத்தில் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியிற் சித்திர ஆசிரியராகக் கடமையேற்றார்.

ஃ ஃ

இமையாணன், சனி

வவுனியா விவசாய இலாகாவில் அதிகாரியாகக் கடமையாற்றிய திரு எஸ். நடேசன், கொழும்பிலுள்ள விவசாய இலாகா தலைமைக்காரியாலயத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

உடுப்பிட்டிமகளிர்கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. தியாகராசா திருநெல்வேலி செங்குந்த பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

முருங்கன், சனி

வங்காலையில் அப்போதிக்கரியாகக் கடமையாற்றிய திரு. பரமானந்தன் ரனுராவெல என்னுமிடத்திற்கு மாற்றலாகியுள்ளார். இவரதுஇடத்துக்கு தொடந்து பேசுட என்னுமிடத்திலிருந்து திரு. நடராசா என்பவர் வந்துள்ளார்.

ஃ ஃ ஃ

உடுவில், சனி

உடுவில் கிராமசபைக் காரியதரிசி திரு பி. சபாபதிப்பிள்ளை இம் மாதம் முதல் பண்டத்தரிப்புகிராமசபைக்கும், லிகிதர் திரு. ஏ. வி. இராசதுரை நல்லூர் கிராமசபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களின்காலி இடத்தைமுறையே கரைச்சி கிராமசபைக்காரியதரிசிதிரு எஸ். வி. சரவணமுத்துவும், நல்லூர்க் கிராமசபை லிகிதர் திரு இ. பேராயிரமும் நிரப்பியுள்ளனர்.

ஃ ஃ ஃ

உடுப்பிட்டி, சனி

வடபிரதேச சுகாதாரக் கல்வி விரிவுரையாளரான திரு எஸ். பொன்னம்பலம் பெப்ரவரி மாதம் முதல் மட்டக்களப்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ ஃ

உடுப்பிட்டி, சனி

நாலுபிட்டான் காரியாதிகாரி அலுவலகத்தில் தற்காலிக லிகிதராகக் கடமையாற்றிய திரு. கே. கனகரத்தினம் நிரந்தர லிகிதராகப் பதவி உயர்வு பெற்றுள்ளதுடன் இம்மாதம் முதல் கொழும்பு நில அளவையாளர் கந்தோருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## பஜனை

அளவெட்டி, சனி

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் மார்கழிப் பஜனை பூர்த்திவிழா பிரமஸ்ரீ எஸ். துரைச்சாமிக் குருக்களின் தலைமையில்பொங்கல் திருநாளில் நடைபெற இருக்கின்றது. பஜனையில் கலந்துகொண்ட மாணவ மாணவிகளுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

## வரவு-செலவுத் திட்டத்தில் புள்ளி விபர முரண்பாடு

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை பட்டினசபையின் வரவு-செலவுத்திட்டத்தில் காணப்படும் புள்ளிவிபரங்கள் சம்பந்தமாகதற்போது பிரச்சினையொன்று எழுந்துள்ளது. கடந்த 31-ம் திகதி நிறைவேற்றப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் வரவு ரூபா 151419 என்றும் செலவு ரூபா 15651 என்றும் மீதி ரூபா 768 என்றும்குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வரவு-செலவுத் திட்டத்தை பின்னர் பரிசீலனை செய்தபோது ரூபா 4482 துண்டு விழுவதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. இப்போதுதுண்டுவிழும்தொகை ரூபா எண்ணாயிரத்துக்கு மேல் இருக்கும் என்று கருதப்படுகின்றது.

பட்டினசபைத் தலைவரை இதுபற்றி கேட்டபொழுது இதுபற்றி விசாரணைசெய்யப்போவதாகக் கூறினார்.

# இந்திய தேர்தல் அரங்கு

## காமராஜர் முயற்சி

முன்னாள் மத்தியசர்க்கார் மந்திரியான டி.டி. கிருஷ்ணமாச்சாரியை லோகசபைக்கு அபேட்சகராக நிற்கும்படி செய்யத்தாம் முயற்சிக்கப்போவதாக காங்கிரஸ் தலைவர் காமராஜ் கூறியுள்ளார். நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

ஃ

## கேரளத்தில் பி. சோ.

கேரளத்தில் 15 அசெம்பிளி தொகுதிகளில் பிரஜா சோஷலிஸ்ட்கட்சி அபேட்சகர்களை நிறுத்தும் என்று அக்கட்சியின் கேரள கிளைத் தலைவர் ஏ. கோபாலபிள்ளை தெரிவித்துள்ளார். அபேட்சகர்களின் பெயர்கள் இம்மாதம் 10-ம் திகதி அறிவிக்கப்படும்.

ஃ

## கல்யாணசுந்தரம் தொகுதியில் தி. மு. க.

திருச்சி—2 அசெம்பிளி தொகுதியில் வலதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர் எம். கல்யாணசுந்தரம் எம். எல். ஏக்கு எதிராக வேட்பாளர் நிறுத்துவதெனத் தி. மு. க முடிவுசெய்திருப்பதாகத் தெரிகிறது. இத்தொகுதியில் முன்னாள் கவுன்சிலர் ஆ. நாகசுந்தரம் தி. மு. க. வேட்பாளராக முடிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## வாக்குப்பதிவு

சென்னை மாநிலத்தில் 2,08,49,658 வாக்காளர்களுக்கும்மொத்தம்2,88,54 வாக்குப் பதிவு நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்று, பிரதம தேர்தல் அதிகாரி ஏ. எச். காஸி தெரிவித்துள்ளார்.

ஃ

## காங். ஊர்வலத்தில் ஆர்ப்பாட்டம்

காங்கிரஸ் தேர்தல் இயக்க ஆரம்பமாக ராஜ்கோட் ஜில்லா காங்கிரஸ் ராஜ்கோட்டில் நடத்திய ஊர்வலத்தைத் தடுக்கப்பகவதை எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் முயற்சித்தனர். ஊர்வலத்தில் மொரார்ஜிதேசாயும் இருந்தார். பின்னர் வாக்காளர் மகாநாட்டில் இயக்கத்தை அவர் துவக்கி வைத்தார்.

ஃ

## சுதந்திராகட்சி உடன்பாடு

ராஜஸ்தானில் சுதந்திரா கட்சியும், போட்டி காங்கிரசும் வருகிற பொதுத் தேர்தலில் உடன்பாடு செய்து கொள்வதுபற்றிப் பேச்சுவார்த்தை நடந்தது. சுதந்திராகட்சி சார்பில் மசானி கலந்து கொண்டார்.

ஃ

## வழக்கமானதுதான்!

காங்கிரஸ்காரர்கள் ராஜினாமா செய்வதுபற்றிக்குறிப்பிட்ட பிரதமர் இந்திரா காந்தி "தேர்தலுக்கு முன் இப்படி நடப்பது வழக்கமானதுதான்!" என்று கூறினார். "கடந்த தேர்தலுக்கு முன்னும் சில காங்கிரஸ்காரர்கள் விலகினார்கள். இப்போதும் சிலர் விலகுகிறார்கள். இது வழக்கமானதுதான். ஒன்றும் புதிதானது அல்ல" என்றார் அவர்.

ஃ

## 'காங்கிரஸ் தோல்வி உறுதி'

"இந்த முறை எதிர்க்கட்சிகளின் வாக்குகள் சிதறாது. காங்கிரஸ் தோல்வி அடைவது உறுதி" இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு. கருணாநிதி சென்னை ஓட்டேரியில் தி. மு. கழக தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

## தேங்காய் உடைத்தார்!

வீரசிவாஜியின் சிலை முன் தேங்காய் உடைத்து, பம்பாயில் உள்நாட்டு மந்திரி சவான் தேர்தல் பிரசாரத்தைத் தொடக்கி வைத்தார்.

ஃ

## நந்தா ஆசை!

"பொதுத் தேர்தலுக்குப் பிறகு பலம்வாய்ந்த பிரதமர் இந்தியாவை ஆள வேண்டும்" என்று முன்னாள் மத்திய உள்நாட்டு மந்திரி நந்தா கூறினார்.

ஃ

## குறைகள் தீரும்!

"எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வந்தால் 6 மாதங்களில் மக்களின் குறைகள் தீர்ந்துவிடும்" என்றுசோஷலிஸ்ட் தலைவர் லோகியா கூறினார்.

ஃ

## சுப்பிரமணியம் பயப்படுகிறார்!

"எதிர்ப்பு அணியைக் கண்டு டில்லி மந்திரி சுப்பிரமணியம் பயப்படுகிறார்" என்று தி. மு. க தலைவர் மு. கருணாநிதி, ஆயிரம் விளக்குத் தொகுதியில் நடைபெற்ற தி. மு. கழகத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

ஃ

## பேச்சு நடத்துவோம்!

"எதிர்ப்பு அணியுடன், தொகுதிஅணியாவது உடன்பாடு காண பேச்சு நடத்துவோம்" என்று வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கே. டி. கே. தங்கமணி கூறினார்.

ஃ

## புதிதாக ஒன்றுமில்லையே

"தி. மு. கழக தேர்தல் அறிக்கையைப் படாடோபமான மொழியில் எழுதி இருக்கிறார்கள். அதில் புதிதாக ஒன்றும்இல்லை. தி. மு. கழகம், சுதந்திரா, முஸ்லிம் லீக், இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுக்கு ஒரே ஒரு தேர்தல் அறிக்கை வெளியாகும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் ஒவ்வொருகட்சியும் தனித்தனி தேர்தல் அறிக்கை வெளியிட்டுள்ளது. இது குறித்து ஆச்சரியப்படுகிறேன்." இவ்வாறு காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில், டில்லி மந்திரி சுப்பிரமணியம் கூறினார்.

ஃ

## கேரள எதிர்ப்பு அணியில் பிளவு

கேரள எதிர்ப்பு அணியிலுள்ள எதிர்க்கட்சிகள் பிளவுபட்டு நிற்கின்றன. இடதுசாரிகம்யூனிஸ்ட் கட்சியில் தேசிய வாதிகளிடையேயும் தீவிரவாதிகளிடையேயும் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. முஸ்லீம் லீக்குக்குள்ளும் பிளவு ஏற்பட்டுள்ளது. மார்க்ஸீய வாதிகளுடன் லீக் சேருவதை எதிர்க்கும் முஸ்லீம் மதத்தலைவர்கள் தனியாக ஒரு கட்சியை ஆரம்பித்துள்ளனர். இது முஸ்லீம் வாக்காளர்களைப் பிரிப்பதாக உள்ளது.

ஃ

## கெய்ரோன்மகன் தேர்தலில் குதிக்கிறார்!

பஞ்சாப் பழைய முதல் மந்திரி கெய்ரோனின் மகன், காங்கிரசை எதிர்த்து சீக்கியர் கட்சிசார்பில்போட்டியிடுகிறார். பஞ்சாப் முதல் மந்திரியாக இருந்த கைய்ரோன் சுட்டுக்கொல்லப்பட்டது தெரிந்ததே. இவருடைய மகன் சுரேந்தர்சிங் கெய்ரோன்வருகிறபொதுத் தேர்தலில், காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாலிபர்கள் மனுச் செய்யவே இல்லை"

யாழ்ப்பாணம், சனி
ஆனைக்கோட்டையில் இன்று திறந்து வைக்கப்படவிருக்கும் நெசவுநிலையத்தில் பயிற்சி பெறுவதற்கு ஆண்கள் குறிப்பாக வாலிபர்கள் எவரும் மனுச்செய்யவில்லை என்று வலி மேற்கு காரியாதிகாரி நேற்று "ஈழநாடு" நிருபரிடம் தெரிவித்தார்.

இந்த நெசவு நிலையத்தில் பயிற்சி பெறுவதற்கு மனுச் செய்திருந்த வாலிபர்களை நீக்கிவிட்டும் பெண்களை மாத்திரம் தெரிவுசெய்ததாக ஒருவர் புகார் கூறியதாக வெளிவந்த செய்தி பற்றி காரியாதிகாரி தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

ஆனைக்கோட்டை முன்னைய கிராமசேவகரிடமோ இப்போதைய கிராமசேவகரிடமோ இப்போதைய கிராம சேவகரிடமோ ஆண்கள் எவரும் நெசவுநிலையத்தில் பயிற்சி பெறக் கோரி மனுச்செய்யவில்லையென்றும் காரியாதிகாரி தெரிவித்தார்.

கோக்குவில் பகுதியைச் சேர்ந்த சுமார் எட்டுப் பேர் முன்பு மனுச்செய்திருந்தனரென்றும் ஆனால் இதற்கு அப்பகுதி கிராமமுன்னேற்றச் சங்கம் சம்மதமளிக்கவில்லையென்றும் இதனால் அந்த எட்டுப்பேரின் மனுக்களும் நிராகரிக்கவேண்டி யேற்பட்டதென்றும் காரியாதிகாரி தெரிவித்தார்.

அரசாங்க நன்கொடையுடன் ஆனைக்கோட்டை கிராமச்சங்கத்தினால் அமைக்கப்பட்டிருக்கும் நெசவுநிலையத்தை முன்னாள் செனட்டர் எஸ். நடேசன் இன்று திறந்துவைக்கிறார். இவ்வைபவத்தில் யாழ். அரசாங்க அதிபரும் கலந்துகொள்வார்.

யாழ்ப்பாணத்தில்

## பல்வைத்திய நிபுணர்கள் வேலைநிறுத்தம்: நோயாளர் அவதி

யாழ்ப்பாணம், சனி
அகில இலங்கையிலும் நேற்று முன்தினம் தொடக்கம் நடைபெற்றுவரும் அரசினர் பல் வைத்திய நிபுணர்களின் வேலைநிறுத்தத்தினால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த 5 பல் வைத்திய நிபுணர்களும் நேற்று முதல் வேலைக்கு வரவில்லை.

இதன் காரணமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு பல் சிகிச்சை பெறுவதற்காக நேற்று வந்த பல நோயாளிகளும் ஏமாற்றத்துடன் திரும்பிச்சென்றனர். பல் வைத்திய நிலையத்தில் நாதிகள். அட்டன்கள்கூடக் காணப்படவில்லை. இதனால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள பல் வைத்தியநிலையம் நேற்று முதல் மூடப்பட்டுள்ளது.

அரசினர் பல் வைத்திய நிபுணர் சங்கத்தின் தலைமைப்பீடத்தின் அறிவித்தலைத்தொடர்ந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியைச் சேர்ந்த பல்வைத்திய நிபுணர்களான டாக்டர்கள் கே. நித்தியானந்தன், கே. முருகுப்பிள்ளை, எஸ். ஜெயவீரசிங்கம், வி. குகதாசன், கே. தில்லைநடராசா ஆகிய ஐவரும் நேற்று வேலைக்கு வரவில்லை.

நேற்று பல் சிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு நெல்லியடி, பலாலி, நெடுந்தீவு முதலிய தூர இடங்களிலிருந்து வந்த அதிகமான நோயாளிகளும், இராணுவ கடற்படையைச் சேர்ந்த நோயாளர்களும் சிகிச்சை பெறாது சென்றது குறிப்பிடத்தக்கது.

நோயாளர்களைப் பிரத்தியேகமாகப் பார்வையிடுவதற்கு வழங்கப்படும் அலவன்ஸ், ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியின் அனுமதிக்கூடாக பிரத்தியேக வைத்தியசாலை நோயாளர்களைப் பார்வையிடுவதற்கான அனுமதி, சம்பள உயர்வு, பிரத்தியோகவிடுதி சம்பந்தமான ஏழு கோரிக்கைகளை மையமாகவைத்தே இவ் வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறையில் சிகிச்சை நிலையத்தின் டாக்டர் பருத்தித்துறை, சுன்னாகம், இவி நொச்சியல் சிகிச்சை நிலையங்களின் டாக்டர் ஆகியோரும் நேற்று முதல் வேலைநிறுத்தம் செய்துள்ளதால் இப் பல் சிகிச்சை நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

(ந நி)

## தோளில் தட்டிய இளைஞருக்கு கன்னத்தில் அறை
### இளம் பெண்ணின் கோபாவேஷம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
தனியார் பஸ் ஒன்றுக்குள் இருந்த இளம் பெண் ஒருவரிடம் சென்று அவரது தோளில் தட்டினாராம் இளைஞர் ஒருவர். கோபங் கொண்ட இளம் பெண் அவரது கன்னத்தில் அடித்தாராம். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் ஊரெழுவில் நடைபெற்றது.

ஊரெழுவைச் சேர்ந்த நாகமுத்து என்பவரின்மகள் சரசு (21 வயது) இவரிடம் தகாதமுறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாக இதே இடத்தைச் சேர்ந்த 17 வயது இளைஞரான செல்வராசா என்பவர்மீது கன்னாகம் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. சம்பவம் நடந்தபோது சரசுவின் தகப்பனார் வேலைக்குப் போய்விட்டதாகவும், தாய் தோட்டத்திற்குப் போய்விட்டதாகவும் வீட்டில் ஒருவருமே இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெண்ணிடம் அடி வாங்கிய தால் வெட்கம் கொண்ட இவ் இளைஞர் பெண்ணை தடி ஒன்றால் தாக்கியதாகவும் காலால் உதைந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்த பெண் வைத்திய பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ந நி)

### பாராட்டு

சுழிபுரம், சனி
சுழிபுரம் பகுதிக்கு புதிய சமாதான நீதவானாக நியமிக்கப்பட்ட திரு. பொ. இராஜசுந்தரத்துக்கு சுழிபுரத்தில் ஒரு பாராட்டுக்கூட்டம் சுழிபுரம் ஐக்கிய சங்க சைவவித்தியாசாலையின் முன்னாள் மனேஜர் திரு. க. மகாதேவன் தலைமையில் நடைபெற்றது.

விக்டோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளர் தம்பி திரு. நா. பிள்ளை உட்படப் பலர் அவரது சேவையைப் பாராட்டிப் பேசினர்.

திருகோணமலைக்கடிதம்

## அன்பு வழிபுரமக்கள் கைகாட்டி மரங்களா?

— நமது நிருபர் —

உலகில் தலைசிறந்த இயற்கைத் துறைமுகத்தைத் தலைநகராகக் கொண்டுள்ளது திருக்கோணமலைப் பட்டினம். இப்பட்டின நகரசபை எல்லைக்குட்பட்டது, நாம் புனித பெயர் கொண்ட அன்பு வழிபுரம். ஆனால் தமிழினம் பரந்து வாழும் ஐயாயிரம் மக்களைக் கொண்ட இச்சூழல் நகரசபையின் 9-ம் வட்டாரத்தினுட்பட்டது. மக்களின் வாக்குகளைப் பெற்றே நகரசபை அங்கத்தவர்களாகிவிட்டால் அப்புறம் அவர் அவ்வூருக்குச் செல்வதே கிடையாதா?

அன்பு வழிபுரச் சந்திக்குச் செல்லும் பிரதான பாதை குழியும் சதுப்புமாக மனிதனும் நடந்துசெல்ல முடியாத அளவுக்கு மோசமாக இருப்பதை அங்கு அங்கத்தவரோ, அல்லது நகர பிதாவோ காணவில்லையா? இப்பிரதான வீதிகளைக் கல்லோட்டுத் தார் வீதிகளாக்கினால் திருக்கோணமலைப் பட்டினத்தின் அழகு மேம்பட்டு அமராவதியாகி விடுமோ என நகர பரிபாலனத் தலைவர்கள் அஞ்சுகிறார்களா அல்லது இவ்வூர் மக்கள் அந்தமான்கைதிகளைப் போல் இழிவுபடுத்தப்பட்டு ஒதுக்கப்பட்டவர்களா?

இப்படியாகக் கடந்த 10 ஆண்டுகளாக அன்பு வழிபுரக் குடியேற்றத்தில் நகரத்தில் ஒரு புறத்தில் நரகவேதனைப்படும் தமிழினம் கவலை தோய்ந்த கண்களோடு வருந்திக் கேட்கிறது.

உடனடியாக இவ்வூரவர்களின் போக்குவரத்து வசதிகளை நகரசபை அதிகாரிகள் கவனித்து பஸ் வண்டிப் பிரயாணத்தை அன்புவழிபுரத்தினூடாகச் செல்ல ஆவன செய்வார்களா? குறுக்கும், நெடுக்குமாகச் செல்லும் பல பாதைகள் சேறும், சதுப்பும், குன்றும் குழியுமாக இருப்பதால் அவ்வூருக்குள் புதிதாக ஒருவர் சென்று திரும்ப முடியாத அளவிற்குப் பழுதடைந்து கிடக்கும் பாதைகளைச் செப்பனிடுவது யார் வேலை?

இந்நிலையில் அன்பு வழிபுர மக்களைக் கைகாட்டி மரங்களாகப் பாவித்து வருவதை நிறுத்திப் பிரதான பாதைகளையாவது திருத்தித் தருமாறு நகர சபையினரை மக்கள் வேண்டுகின்றனர்.

ஃ

### நகரமா, நரகமா?

பிறதேசங்களிலிருந்து இலங்கைத் தீவுக்கு விஜயம் செய்யும் மக்கள் யாவரினதும் கவனத்தைக் கவர்வது இயற்கை வளப்புமிக்க மிளிரும் திருக்கோணமலை நகரமாகும். பிறநாட்டுச் செலாவணியைப் பெருக்கிக்கொள்ளும் முக்கிய நோக்கத்துடன் இலங்கை அரசாங்கமே திருக்கோணமலை நகரத்தின் மூலமாகப் பிறநாட்டுமக்களுக்கு இயற்கை அன்னையின் எழில்மிகு தோற்றத்தை எடுத்துக் காட்டும் முயற்சியாக, அவர்களுக்காக வசதியான விடுதிச்சாலைகள் கூட உலகப் பெரும் புகழ் வாய்ந்த "ஹில்டன் ஹோட்டல்" ஸ்தாபனத்தாரால் பல அடுக்கு மாளிகைகளாகக் கட்டுவிப்பதற்காக முயற்சிகள் செய்யும் இந்த வேளையில், இந்த ஊரின் வாயிலிலேயே துர்நாற்றத்தை அள்ளி வீசும் குப்பை, கழிவுகளைக் கொண்டுவந்து தினமும் கொட்டுகின்றனர். ஊரினுள் நுழையும்போதே துர்நாற்றமெடுக்கும் சூழலில் உள்ள இந்த நகரை இந்நகர பாதுகாப்பாளர்களே இதை நரகமாக்கிக் கொண்டிருந்தால் எம்மை நாடி வரும் விருந்தாளிகள் இங்கு வராமலேயே திரும்பிவிட நேரிடும்.

ஃ

### தட்டுப்பாடு

திருக்கோணமலை வாசிகளுக்கு கொத்தமல்லி கிடைப்பது குதிரைக்கொம்பாக இருக்கின்றது. இங்கு கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் கிளைகள் எதுவுமே கிடையாது. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று இங்கு இயங்கிக் கொண்டிருந்தபோதிலும் கூட்டுறவுப் பண்டகசாலைகளிலோ அன்றி அரிசி விநியோகத்துக்கான அதிகாரம் பெற்ற எந்த பண்டகசாலைகளிலோ தேவைக்குரிய அளவு மல்லி கிடைக்கப் பெறுமல் இங்குள்ளவர்கள் வெகுவும் இன்னல்படுகின்றனர். பங்கீட்டரிசிப் புத்தகங்கள் ஆறு உள்ள குடும்பம் ஒன்றுக்கு மொத்தமாக 2 அவுன்ஸ் மல்லி மட்டுமே கிடைப்பதுகூட அபூர்வமாக இருக்கின்றது. இது காரணமாக ஒரு பண்டகசாலையில் சென்று விசாரித்ததில் 1200 பங்கீட்டரிசிப் புத்தகங்களைக் கையாளும் அந்தப் பண்டகசாலைக்கு மொத்தமாகக் கிடைப்பதே 96 ரூத்தல் மல்லிதானாம்! இந்நிலையில் யாரைக் குறைகூறுவது.

ஃ

திருக்கோணமலையிலிருந்து ஆறு மைல்களுக்கப்பால் உள்ள கன்னியாய் என்னும் கிராமம் இலங்கையிலேயே முக்கியத்துவம் வாய்ந்ததொரு கிராமமாகும். இங்குதான் உலகப்பிரசித்திபெற்ற வெந்நீரூற்றுக்கள் இருக்கின்றன. இத்தனை பெருமை வாய்ந்த கிராமவாசிகளின் இறுதி யாத்திரைக்குரிய இடம் கல்லும் முள்ளும் செறிந்த காடாகக் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது. மானிட வாழ்வில் கிடைக்காத நிம்மதியான சூழ்நிலை மரணத்தின் பின் ஆவது கிடைக்கட்டும் என்று யாவர் எதிர்பார்ப்பர். ஆனால் இக்கிராமத்துமக்கள் அதற்குக் கூடக் கொடுத்து வைக்காதவர்களாகியிருப்பது வருந்தத்தக்க தொன்றாகும்.

இந்த மயானத்தைப்பாதுகாக்கும் உப்புவெளி கிராமச்சபையினர் உடனடியாக இந்தக் குறைபாட்டை நிவர்த்திசெய்ய முன்வருவார்களா?

## "முயற்சிதோற்ருல்..."

யாழ்ப்பாணம், ஞாயிறு
"தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக, அரசாங்க அதிபர் எடுத்துவரும் முயற்சி வெற்றியளிக்காவிடில், சத்தியாக்கிரகம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை" என்று சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி இணைச் செயலாளர் திரு. எம். சி. சுப்பிரமணியம், நமது நிருபரிடம் கூறினார்.

அரசாங்க அதிபரின் முயற்சியை முறியடித்து அதன் மூலம் கட்சியை வளர்க்க சிலர் முயன்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: ஐக்கிய முன்னணி தொடர்ந்து பல பகுதிகளிலும் பிரசாரக் கூட்டங்கள் நடாத்தி வருகிறது. நாங்கள் சிறுபான்மைத் தமிழர்களை ஒற்றுமைப்படுத்தவும், எங்கள் உரிமைகளைப்பெற வேண்டிய அவசியத்தை வற்புறுத்தவும் கூட்டங்கள் நடத்துகிறோம். அரசாங்க அதிபரின் முயற்சி வெற்றி பலிக்குமென்றே கருதுகிறோம். ஏற்கனவே சில கோவில் சொந்தக்காரர்கள் ஆலயப்பிரவேசத்திற்கு சம்மதமளித்திருப்பது வரவேற்கத்தக்கது.

—

### தி. மு. க. தேர்தல் அறிக்கை

தி. மு. க. தேர்தல் அறிக்கை, அக்கட்சியின் சுதந்திராக்கட்சியின் செல்வாக்கு எவ்வளவு தூரம் பிடித்துள்ளது என்பதைவே காட்டுவதாக வலது சாரி கம்யூனிஸ்ட் தலைவர் கல்யாண சுந்தரம் திருச்சியில் பேசுகையில் கூறினார்.

கூட்டுச் சேராக் கொள்கையை திருத்தியமைக்க வேண்டுமென்ற கோரிக்கையும், ஆசிய பொதுச்சந்தை உருவாக்குவதற்கான யோசனையும் பிற்போக்கு நடவடிக்கைகளாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

'இந்திய யூனியனுக்குள் திராவிடம்' என்ற கோரிக்கை, வகுப்புவாத உணர்ச்சிகளை மீண்டும் கிளறிவிட உதவுமெனவும், தமிழ் நாட்டின் நலனுக்கு உகந்ததல்லவென்றும் அவர் மேலும் கூறினார்.

—

### வேலைநிறுத்தம் பற்றி ஆராய்ந்தனர்

கொழும்பு, சனி.
பல்வைத்தியர்களின் வேலை நிறுத்தம் சம்பந்தமாகவும் அவர்களது கோரிக்கைகள் பற்றியும் அமைச்சர்கள் நேற்றுக்கூடி ஆலோசனை செய்தனர்.

—

### பிரியாவிடை

அளவெட்டி, சனி
பல சனசமூக நிலைய உபதலைவரும் காங்கேசன்துறை தபால் நிலையத்தில் உப அதிபராகக் கடமையாற்றி வருமான திரு. வி. ஆறுமுகம் கொழும்பு பெரிய தபால் காரியாலயத்திற்கு மாற்றிச் செல்வதையிட்டு பல வாசிகசாலை மண்டபத்தில் முன்னாள் காங்கேசன் துறைப் பட்டின சபைத் தலைவர் திரு. மு. நடவீரசிங்கம், தலைமையில் அவருக்கு ஒரு பிரியாவிடை அளிக்கப்பட்டது.

அன்னாரின் சேவையைப் பாராட்டி திரு. மு. நடவீரசிங்கம், திரு. எஸ். கணபதிப்பிள்ளை, திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் உட்பட மற்றும்பலரும் பேசினர்.

### மாஜி மேயர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

செலவு தொகையின்றி தீர்ப்பு வழங்கப்பட்டது தமது கட்சியின் நியாயம் இருக்கிறது என்பதற்கு போதிய ஆதாரமாகஇருப்பதாக அவர் கூறுகிறார்.

திரு. துரையப்பாவுடன் லண்டன் சென்றிருந்த அவரது மனைவியாரும் இங்கு வந்துள்ளார்.

### கறுப்புக் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஸ்ரீ நடவடிக்கையால் அசம்பாவிதங்களேதும் நடைபெருது தடுக்கவே இவ்வித உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[illegible] டுப் பேஸிலைப். திரு. எ. நல்லதம்பி நன்றி கூறினார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலக் 68-ம் கோவில் வேலைவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஜனவரி 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org